189

ഐക്യ ഭാരതം

ലക്കം - 1 — പുസ്തകം -

ജനുവരി - 1934 —

J2
VIN on,N34K.
N34.1.1.
148725

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

(189)

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS LEAGUE

மலர் 1. ஜனவரி. இதழ் 1.

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
7-APR 193
MADRAS

பொருளடக்கம்.

—

பக்கம்.

1. நமது முன்னிற்கும் வேலை ... ... 2
2. கூட்டுறவு விளக்கம் ... ... 5
3. இந்தியாவில் ஐக்கிய ஆட்சி ... ... 10
4. ஐக்கிய அயர்லாந்து ... ... ... 17
5. கத்தோலிக்க காங்கிரஸ் ... ... 25
6. இடி! இடி!! ... ... ... 27

காரியாலயம்:

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

# "ஐக்கிய அரசு"

## யௌவன கூட்டுறவாளர் சங்க சஞ்சிகை.


*போஷகர் :*

**டாக்டர் ஏ. மதுரம்.**

*சங்கத் தலைவர் :*

**P. B. K. ராஜா சிதம்பரம்.**

*காரியதரிசி :*

**என். எஸ். கோவிந்தசாமி.**

*கௌரவ ஆசிரியர் :*

**எஸ். ஜே. ரெத்தினசாமி,** M.A., B.L.


### சந்தா விபரம்

| | |
|---|---|
| உள் நாடு வருடம் 1-க்கு | ரூ. 5—0—0 |
| வெளி நாடு ,, | ரூ 6—0—0. |

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பி வரப்படும்.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 4 வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| 3 வது பக்கம் அட்டை | ரூ 25—0—0. |
| சாதாரண விளம்பரம் பக்கமொன்று | ரூ. 20—0—0. |

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்பட மாட்டாது. விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.

# ஐக்கிய அரசு

**(CO-OPERATIVE COMMONWEALTH)**

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 ஜனவரி திருச்சி


OFFICE OF THE REGISTRAR 7 APR 34

## MESSAGE

**The Hon'ble Mr. P. T. RAJAN,** B. A., Hons. (Oxon) Bar-at-law, Second Minister to the Government of Madras, has sent to the Secretary, The Young Co-operators League, Trichinopoly, the following Message:—

I am glad to see a new journal "Co-operative Commonwealth" in Tamil. A paper of the kind is very badly needed in the Tamil country and I hope you will get full support from the public.

Wishing you and your venture every success.

(Sd.) P. T. RAJAN.

## நற்செய்தி

சென்னை அரசாங்க இரண்டாவது மந்திரி உயர் திரு. கனம் பி. டி. ராஜன் பி. எ., ஆனர்ஸ் (ஆக்ஸ்போர்ட்டு) பார்-அட்-லா அவர்கள் திருச்சி யெளவன கூட்டுறவாளர் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள நற்செய்தியாவது :—

"ஐக்கிய அரசு" என்ற புதிய தமிழ் சஞ்சிகையைப்பார்க்க நான் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் நாட்டிற்கு இதுபோன்ற பத்திரிகை மிக மிக இன்றியமையாதது. பொதுஜன ஆதரவு பூர்ணமாகக் கிடைக்குமென்று நம்புகிறேன்.

ஆரம்பித்துள்ள பத்திரிகை வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென விரும்புகிறேன்.

(ஒப்பம்) பி. டி. ராஜன்.

148725

# நமது முன்னிற்கும் வேலை

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தைப் புகுத்திய மூலபுருஷர்கள் இவ்வியக்கத்தின்மூலம் இந்நாடு பொன்னுடாகுமென அக்காலத்தில் நம்பினர். ஆனால் அப்பெரியார்கள் இதுகாலை இருப்பரேல் கூட்டுறவு இயக்கம் இன்றுள்ள நிலையைப் பார்க்கின் தாங்கள் எதிர்பார்த்தவாறு நடவாமை கண்டு ஏமாற்றமடைவார்கள் என்பது திண்ணம். இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் பெற்றுள்ள நிலையைப் பற்றி சர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் கூறியுள்ள ஆணித்தரமான அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. "[illegible] இன்னும் முதற்படியையும் மிதித்ததாயில்லை" என்கிறார் நிபுணர் விஸ்வேஸ்வரர். இப் பெரியாரின் அபிப்பிராயம் சாமான்யமாகப் புறக்கணிக்கத்தக்கதல்ல. "கூட்டுறவு இயக்கம் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டால், நாட்டினுள் [illegible] யாவரும் அவ்வியக்கத்தை ஆதரித்தால், கிருஷிகள் குறைகள் நீங்குவதுடன் [illegible]களின் எதிர்காலம் சுபேட்சகரமானதாக விளங்குமென நம்புகிறேன்" என்ற தீர்க்கதரிசேபோன்று பயனுள்ள உணர்ச்சி ததும்பும் இம்மொழிகள் நாம் கூறுவனவல்ல, 1911-ஆம் மன்னர்பிரான் கூறிய அறமொழிகளாகும். இந்திய பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய சீர்திருத்தத்திற்கும், ஆக்கவேலைக்கும், தேசீய சிக்கனத்திற்கும் இன்றியமையாததாகவுள்ளது கூட்டுறவு தர்மம் என்பது மிகைபடக் கூறுவதாகாது. இந்தியாவைப் பற்றி இதுகாலை கவனஞ் செலுத்தாத நாட்டினர் உலகில் எவருமில்லை எனலாம். இந்தியாவின் அரசியல் பிரச்சினையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அதற்குக் கிடைக்கக்கூடிய அரசியல் அந்தஸ்தையும்பற்றியே எங்கும் பேச்சாக இருந்துவருகிறது. இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலை எவ்விதமிருப்பினும் இந்நாட்டின் க்ஷேமத்திற்கு செம்மையான பொருளாதாரம் தேவை என்பதையும், அத்துறையிலுள்ள குறைகளைப் போக்கவேண்டுவது அவசியமென்பதையும் அறிஞர்கள் அனைவரும் ஆமோதிப்பர்.

இந்நாட்டில் 100-க்கு 79 பேர் விவசாயிகள்; கைத்தொழிலில் ஈடுபட்டிருப்போர் 100-க்கு 10 பேர்; வியாபாரம், ஏற்றுமதி இறக்குமதி, போக்குவரத்து ஆகியவற்றில் ஜீவிப்போர் 100-க்கு 8 பேர்; நிர்வாகம், பாதுகாப்பு, வீட்டுவேலை, சில்லரை வேலை முதலியன செய்து வாழ்வோர் 100-க்கு 12 பேர். இதன்மூலம் விளங்குவதென்ன? நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விவசாய விருத்தியைப் பொருத்திருக்கிறதென்பதே. விவசாயமே இந்தியாவின் ஜீவ நாடி. இந்திய விவசாயிகளோ அபிவிருத்தியடைவதற்கில்லாமலிருக்கின்றனர். இதற்குப் பல காரணங்களுண்டு. இந்திய விவசாயம் இயற்கையாசவுள்ள சீதோஷ்ணத்தைப் பொருத்திருக்கிறது. மேல் நாட்டில் [illegible] இடங்களிலும், மழைபெய்யாத [illegible] யந்திரங்களைக்கொண்டு தண்ணீர் இறைத்து விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்; இந்நாட்டிலோ மழை பெய்யாவிடில் வருணபகவானுக்கு ஜபம் செய்கின்றனர். மேல் நாடுகளில் 1000 ஏக்கர் நிலத்தை நவீன முறையில் ஓர் நாளில் ஓர் ஆள் பண்படுத்துகிறான்; இந்நாட்டிலோ ஒரு ஏக்கர் நிலத்தைப் பண்படுத்த 10 ஆள் வேலை செய்தாலும் ஒரு நாளில் ஆவதில்லை. மேல்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் வயோதிக காலத்தில் சப்ரட்சணை நிதிக்கும், அரசியல் உரிமைக்கும் போராடுகிறார்களென்றால் இந் நாட்டிலுள்ளவர்களோ ஓர் வேளை கஞ்சி கிடைத்தால் போதுமென்ற மனதுடையோராக இருக்கின்றனர். நிற்க,

JL
VIN m, N34IK N34·1·1

போக்குவரத்து சாதனக் குறைவும், விளை பொருளின் சீர்கேடான விற்பனை முறையும், வறுமையும், பிணியும், கடன் சுமையும், நாணயச் செலாவணியின்மையும், இந்தியக் கிருஷிகளுக்குற்ற நண்பர்கள். இவையாவும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இன்னல்கள் பலவற்றிற்கு ஆளாகியுள்ள பெரும் பகுதியினரான விவசாயிகள் அடங்கிய இந்நாடு உய்வதெங்ஙனம்?

இந்தியக் கூட்டுறவு சரித்திரத்தை இது சமயம் நாம் விரிக்க விரும்பவில்லை. மேம்பட்ட விவசாயத்திற்கும், மேம்பட்ட வியாபாரத்திற்கும், மேம்பட்ட வாழ்க்கைக்கும் மார்க்கம் கிருஷிகளின் கண் விழிப்பைப் பொருத்திருக்கிறதென்றே நாம் கூறுவோம். விவசாயியானவன் தனது வாழ்க்கை நிலையை மேன்மைப்படுத்திக்கொள்ள அக்கறைகொண்டாலன்றி, விஞ்ஞான சாஸ்திரத்தாலோ, அரசாங்கத் திட்டத்தாலோ அல்லது ஆட்சி முறையாலோ உண்டாகும் நன்மைகளை அவன் பயன்படுத்திக் கொண்டாலன்றி, விவசாய விருத்திக்கென பிரத்தியேகமாக நிரந்தரமான எதையும் செய்வது இயலாத காரியம்" என விவசாயக் கமிஷனர்கள் கூறியிருப்பதை இது சமயம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கிருஷிகளின் வாழ்க்கை மேம்பாடடையவேண்டுமானால் கிராமவாசிகளினிடையே ஓர் உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும். இப் பணியைத் தனித்த நபர்கள் எவரும் ஏற்று நடத்தல் இயலாத காரியமென்பது வெள்ளிடைமலை. அதற்கென தனித்ததோர் ஸ்தாபனம் இருத்தல் வேண்டும். கிராமவாசிகளிடையே ஓர் எழுச்சியை இந்த ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும். இச்சேவையையே நாம் கிராமப் புனருத்தாரணமென அழைக்க விரும்புகிறோம். இதுபோன்ற கிராமச் சீரமைப்புத் தொண்டில் இளைஞர்களுக்கு ஊக்கம் உண்டாக்குவதை நமது முதற்கடமையாகக் கொண்டுள்ளோம்.

கிராமச் சீரமைப்பு வேலையை ஆதரிப்போர் பலர்; அலட்சியம் செய்வோர் அநேகர். இவ்விருசாராரும் எக்காலத்திலும், எந்நாட்டிலும் உண்டு. கிடைக்கும் ஆதரவுக்காக அகமகிழ்ச்சி அடைவதோ, அசட்டை செய்யப்படுவதற்காக மனமாற்றங் கொள்வதோ கூடாது. இந்தியாவின் பிரதிநிதியாகவும், தொழிலாளரின் தலைவராகவும், இந்திய வாலிபரின் மூளையாகவும் விளங்கும் பண்டிட் ஜவஹர்லால் நேரு சமீபத்தில் "கிராமச் சீரமைப்பு வேலை வயதுவந்த கிழவிகளுக்கு ஏற்றதாகும்" என்று பரிகாசமாகக் கூறியிருக்கிறார். ஓர் மனிதன் தான் ஓர் லக்ஷியத்தை மனதில் கொண்டிருப்பானாகில் அவனுக்கு அவ்வொன்றைத் தவிர மற்ற யாவும் அற்பமாகவே தோன்றும். அம் மனிதன் தான் கொண்ட கருத்தை ஈடேற்றுவதைப்பற்றி சதா சிந்தனை செய்துகொண்டிருப்பானாகில் ஏனையவற்றினை அவன் அலட்சியம் செய்வான். இது இயல்பு. பண்டித ஜவஹர்லால் அபிப்பிராயம் இதனையொத்தே இருக்கிறது. இதுசமயம் பெஞ்சமன் டிஸ்ரெயிலியைப்பற்றிய ஞாபகம் நமது நினைவுக்கு வருகிறது. அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் கிராமச் சீரமைப்பு திட்டத்தை முதன்மையானதாகக் கொண்டு எங்கு பார்க்கினும் சுகாதார முறையில் நிலத்தினுள்ளாகச் செல்லும் நீர்தாரைகளை விருத்தி செய்வதில் விசேஷ அக்கறை காட்டிவந்தார். அதற்காக அவர் 'சாக்கடை மந்திரி' என பிரிட்டிஷ் அரசியல் வாதிகளால் அழைக்கப்பட்டார். எனவே, இந்திய அரசியல் வாதியான பண்டிட் ஜவஹர்லால் கிராமச்சீரமைப்பு வேலையை கிழவிகளுக்கேற்றதென எள்ளி நகையாடியதற்கு நாம் வியப்படையவில்லை.

"இந்தியாவின் விமோசனத்திற்கு வழி காணவல்லது கூட்டுறவு இயக்கமே" என லின்லித்கோ பிரபு கூறியுள்ளார். இது உண்மையே. ஆனால் ஒன்று மாத்திரம் உறுதி

எழுத்துவாசனையுள்ள இளைஞர்களே பாமர மக்களின் இயற்கையான தலைவர்களாக விளங்குகிருர்கள். கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு இவ்விளைஞர்களின் தன்னலமற்ற சேவை இன்றியமையாதது. கூட்டுறவுக் கொள்கையில் நம்பிக்கையும், அதனை பாமர மக்களிடையே பரப்பவேண்டுமென்ற அக்கரையும் இவர்களுக்கு ஏற்பட்டாலன்றி லார்ட் லின்லிங்கோ ஜோசியம் பொய்த்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. "கூட்டுறவு இயக்கம் ஒன்றே மேதாவிகளையும், கல்வியறிவற்ற பிற்போக்கான நிலையிலுள்ளவர்களையும் ஒன்ருக இணைக்கக்கூடிய ஸ்தாபனம்" என பீகார்-ஒரிஸா கூட்டுறவு கமிட்டியார் கூறியுள்ள அபிப்பிராயத்தை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிருேம்

பொதுவாகத் தென் நாட்டிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும், நம்மாலியன்ற அளவு கிராமச் சீரமைப்புத் தொண்டு புரிவோம். நமது ஜில்லாவிலுள்ள இளைஞர்கள் சிலருக்கு பயிற்சி அளிக்கவும், அவர்கள் மார்த்தாண்டம் ராமச்சந்திரபுரம் முதலிய இடங்களில் உள்ளதுபோல் வேலை செய்துவரவும் ஓர் ஏற்பாடு செய்ய முயலுவோம். நம் நாட்டில் இன்றுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விருத்தியை நாடி வேலை செய்வோம் இன்று கூட்டுறவு சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களை பொதுக் கூட்டத்தின்மூலமும், அநுபவம் நிறைந்தோர் கட்டுரையை வெளியிடுவதின்மூலமும் கூட்டுறவு இயக்க பண்டிதர்களாக்க உழைப்போம் பணம் கொடுக்கல் வாங்கலல்லாத விசேஷ கூட்டுறவு சங்கங்களைப் பெருக்க பாடுபடுவோம். கூட்டுறவு பண்டசாலைகளையும், சிக்கனச் சங்கங்களையும், மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கங்களையும், மாணவர் ஸ்டோர்களையும், மாதர்சங்கங்களையும், தொழிலாளர் பாங்குகளையும், கிராமங்கள்தோறும் நிறுவுவோம். தாழ்த்தப்பட்டவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும், பிற்போக்கான நிலையிலுள்ளவர்களும் உய்யும் வழி செல்வ விருத்தியினலேயன்றி வேறல்ல. இவர்களின் பொருளாதார நிலையை செம்மைப்படுத்த கூட்டுறவு முறையைக் கைக்கொள்ளுமாறு தூண்டுவோம். சுருங்கக் கூறின் மக்களின் வாழ்க்கையில் பல துறையிலும் சாத்தியமானவரையில் கூட்டுறவு இயக்கத்தைப் புகுத்த வேலை செய்வோம். இறுதியாகக் கூறின், சமயச்சண்டையும், சாதிப் பிணக்கும், வகுப்புவாதமும் நிறைந்த பலரையும் சமத்துவமாக சகோதரத்துவத்துடன் சுதந்திர புருஷர்களாய் வாழ கூட்டுறவு சங்கங்களின்மூலம் ஒன்றுபடுத்த முயல்வோம்.



# கூட்டுறவு விளக்கம்

எப். ஆர். ஹேமிங்வே, ஐ. ஸி. எஸ்., மாஜி கூட்டுறவு ரிஜிஸ்தரார்,

**கூட்டுறவு** என்பது வலிவற்றவர்களின் ஒத்துழைப்பு எனப் பொருள்படும். 'சேர்க்கையே பலம்' என்னும் விதியை அடிப்படையாகக்கொண்டு செலவைக் குறைக்கக் கையாளப்படும் பல மார்க்கங்களுக்கும் கூட்டுறவு எனலாம். 'ஐக்கியமே பலம்' என்ற கோட்பாட்டைப் பின்பற்றுவதினல் பல ஹீனர்களும் ஏழைகளும் சேர்ந்த ஒரு சங்கமானது தன் அங்கத்தினர்களுக்கு செல்வந்தர்களும் பலமுள்ளவர்களுமே சாதாரணமாய்ப் பெறக்கூடிய சில நன்மைகளைக் கொடுக்கவல்லதாயிருக்கிறது. கூட்டுறவு என்பது ஏழைகளையும் பலமற்றவர்களையும் சரியாய் நடத்தவும் நியாயமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் காரணமாய் இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு என்பது உதார குணமுள்ள நன்மக்களின் உதவியைப் பெற்று விளங்குகிறது.

## கூட்டுறவு நாணயம்

கூட்டுறவில் பலவகைப்பட்ட மாதிரிகள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் கிராமங்களிலேயுள்ள விவசாயிகளுக்கும், நகரங்களிலேயுள்ள ஏழைஜனங்களுக்கும் நியாயமான வட்டிக்குக் கடன் வாங்கிக்கொடுக்கும் துறையில் கூட்டுறவு இயக்கம் முக்கியமாய் வேலை செய்திருக்கிறது. இந்திய தேசத்து சௌகார்கள் பணத்தை வசூல் செய்யுங்காலத்தில் செய்யும் துன்பம் உலகமறிந்தது. ஆகவே, குறைந்த வட்டிக்கு இவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பதென்பது அளவிடற்கரிய ஓர் பெரும் நன்மையென்பதை விவரித்துக் கூறவேண்டியதில்லை. இத்துறையில் சென்னையிலும் இந்தியாவின் ஏனைய பாகங்களிலும் கூட்டுறவு இயக்கம் அதிகமாய் வேலை செய்திருக்கிறது.

## பிரதம நாணயச் சங்கங்கள்

ரபீசன் சங்கங்கள் :—பரந்த நோக்கமுடைய இந்த நாணய இயக்கத்திற்கு பிரதம கூட்டுறவு நாணயச் சங்கங்கள்தான் அடிப்படையாகும், இந்த நாணய இயக்கம் இரண்டு முக்கிய பிரிவையுடையது; ஒன்று விவசாய சம்பந்தமுள்ளது, மற்றொன்று விவசாய சம்பந்தமில்லாதது. தெளிவாகக் கூறுமிடத்து கிராம சம்பந்தமுடையதும் நகர சம்பந்தமுடையதுமெனலாம். இத் தேசத்தின் முக்கியமான தொழில் விவசாயமானதால் முக்கிய மாதிரி சங்கங்களே அதிகமாய் இருக்கின்றன. அவைகளே மிகவும் முக்கியமானவைகளுமாம். அவை உலோகோபகாரியாகிய ஜெர்மன் தேசத்து ரபீசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரியில் ஏற்பட்டுள்ளன. அதாவது, சிலர் கூட்டுறவு சங்கம் ஒன்றை ஏற்படுத்தி தங்கள் ஒவ்வொருவருடைய பூரா சொத்தையும் சங்கத்தின் பொதுக்கடனுக்கு ஈடாக வைத்தால் சங்கத்தின் நாணயம் சங்கத்தில் சேர்ந்திருக்கும் தனித்தனி மெம்பரின் நாணயத்தைப் பார்க்கிலும் மிகவும் வலிவுடையதென்பதேயாகும். பல வருஷங்களின் அனுபோகமானது இது வாஸ்தவமென்பதை விளக்குவதல்லாது ஏழைகள் கூடிய கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் நடுத்தரமான கடன்கள், சாதாரணமாய் மிகவும் பாதுகாப்புடையன வென்றே சொல்லவேண்டியிருக்கிறது. ஆனல், அங்கத்தினர்கள் சம்பாதிக்கும் திறமை வாய்ந்தவர்களாகவும் எக் காரணத்திற்காக கடன்கள் வாங்கப்படுகிறதோ அதனை முன்னிட்டே வாங்கிய கடன்களை செலவு செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். உண்மையாய் பலனைத் தரக்கூடிய விதங்களில் கடன்களை உபயோகித்தல், அங்கத்தினர்களின் யோக்கியதை சிக்கனம், அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் மேற்பார்வை பார்த்துக்கொள்ளுதல், வரவுக்குமேல் அதிகமாக செலவு செய்யும் அங்கத்தினர்களின் குணத்தை மற்ற அங்கத்தினர்கள் அறியும்படி செய்தல், ஒரு பொது காரியத்துக்காக ஏற்பட்ட கூட்டத்தினல் சாதாரணமாய் ஏற்படக்கூடிய திடத்துவமான உணர்ச்சி முதலியன கூட்டுறவு சங்கங்களினல் ஏற்படுகிறது.

ஷீல்ஸ்டெலிஷ்க் ஸங்கங்கள் :—கிராம சங்கங்கள் சங்கத்தின் கடனுக்காக சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய வரையறுக்கப்படாத பொறுப்பின் ஆதாரவின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. விளங்கக் கூறின் சங்கங்கள் உடனிருக்கும் அங்கத்தினர்களுடைய நம்பிக்கையின்பேரில் ஏற்படுத்தப்படுகின்றன எனலாம். சங்கங்களின் விருத்திக்கு அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் நம்பவேண்டுமென்பதும், ஒருவரையொருவர் நன்றாய் அறிந்திருக்கவேண்டுமென்பதும் மிக அவசியம். இவ்விதம் ஒருவரையொருவர் நம்புவதும் அறிவதும் ஒரு கிராமத்தில் சாதாரணமாய்க் காணலாம். ஆனால், ஒரு நகரத்திலோ கூட்டுறவினால் நன்மையையடைய விரும்பி பலர் ஒன்றுசேரப் பிரியப்படுகின்றார்கள். அங்ஙனம் சேரவிரும்பும் அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கியறியாத குறையினால் சங்கத்தின் கடனுக்காகத் தங்களுடைய பூரா சொத்தையும் ஓர் அளவைக் குறிப்பிடாமல் ஈடு வைக்க சம்மதிப்பதில்லை. அத்தகையோருக்கு மற்றொரு ஜர்மன் தேசப் பெரியார் ஷீல்ஸ் டெலிஷ்க்கின் என்பார் ஓர் வழிகாட்டியுள்ளார். அவர் வகுத்த திட்டப்படியே நமது நகர சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மெம்பருடைய பொறுப்புத்தான் எடுத்துக்கொண்டிருக்கும் பங்குத்தொகையின் அளவோடு நிற்கும். அதோடு உண்மையான கூட்டுறவின் அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன. இச்சங்கங்களிலும் கடன்கள் நியாய வழிகளில் கொடுக்கப்படுகின்றனவா வென்பதை அறிய அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் ஒரு சிறிதேனும் அறிந்திருத்தல் வேண்டும். மேலும், கடன்கள் அங்கத்தினர்களுக்கே கொடுக்கப்படவும் வேண்டும். கிராமச் சங்கங்களைப்போலல்லாது கடனைத் திருப்பிச் செலுத்த அங்கத்தினர்களுடைய சொந்த ஆதாரவே மிகவும் முக்கியமாக நாடப்படுகிறது.

## மத்திய பாங்குகள்

சங்கங்கள் அங்கத்தினருக்கு சலபமான வட்டிக்குக் கடன் கொடுப்பதேயல்லாது அந்த அங்கத்தினர்களும் அவர்களின் அக்கம்பக்கங்களிலுள்ளவர்களும் தாங்கள் காலா காலங்களில் மிச்சம் பிடிக்கும் பணத்தை பாங்குகளில் பாதுகாப்புடையவும் இலாபகரமாகவும் அனுகூலமுமான விதத்தில் டிபாசிட் செய்யும்படி செய்வதும் தூண்டுவதும் கூட்டுறவு வேலைதேவியின் நோக்கமாகும். இதுவரையில் அங்கத்தினர்கள் ஏராளமாகக் கடன் வாங்குகிறார்களேயல்லாது சென்னை ராஜதானியிலுள்ள மத்திய பாங்குகள் டிபாசிட் சேகரிப்பதில் அவ்வளவு நன்றாக விருத்தியடையவில்லை. நகரங்களிலேயுள்ள பாங்குகள் அங்கத்தினர்களிடமிருந்தும் அங்கத்தினர்களல்லாதவர்களிடமிருந்தும் டிபாசிட்டுகள் திருப்திகரமான அளவுக்கு சேகரித்திருக்கின்றன. ஆனால் கிராமச்சங்கங்களுக்கு வேண்டிய ஏறக்குறைய முழுத்தொகையும் வெளியில் கடன் வாங்கியே கொடுக்கவேண்டியிருக்கிறது. இங்ஙனம் கொடுக்க இந்த இராஜதானியில் சில பெரிய பட்டணங்களில் மத்திய பாங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நகரம் அல்லது கிராமத்தைச் சேர்ந்த பிரதம சங்கங்களுக்கு கடன்கள் கொடுப்பது இலாபகரமானதென்றும் பாதுகாப்பையுடைய வைப்பு என்றும் சீக்கிரம் கண்டுபிடிக்கப்பட்டது. நகரங்களிலும் கிராமங்களிலும் கூட்டுறவு இயக்கத்தைப் பரப்பினால் இந்நாட்டுமக்கள் அடையக்கூடிய இலாக்கியத்தை உணர்ந்த பல கனவான்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு உழைக்க முற்பட்டனர். ஊக்கமும், உற்சாகமும், தேசாபிமானமுடைய சிலருடைய உதவியால் இந்த இயக்கம் ஆரம்பித்த முதல் இந்த பாங்கிகளில் வரும் பங்குத்தொகைகளும் டிபாசிட்டுகளும் பிரதம சங்கங்களுக்கு கடன் கொடுக்கப் போதுமானதாயிருந்தன. இந்த பாங்குகளின் முறைகள் ஜாயிண்ட் ஸ்டாக்கு பாங்குகளை அநேகமாய் ஒத்திருக்கின்றன. இந்த இயக்கம் உண்டான முதல் முதலில் இந்த பாங்குகளில் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதல்லாமல் வேறு விதமான எவ்வித கூட்டுறவு அம்சமும் காணப்படவில்லை. சங்கங்கள் பாங்குகளின் நிர்வாகத்தில் தங்களுக்குப் பாத்தியதை வேண்டுமென்றும் கடன் வாங்கும் சங்கங்களின் விருத்தியின் பேரிலேயே பாங்குகளின் அபிவிருத்தி பொருந்தியதாய் இருப்பதால் பாங்குகளின் இலாபத்தில் தங்களுக்கு வேறே சுதந்திரம் இருக்கவேண்டுமென்றும் உடனே கேழ்கத் தலைப்பட்டன. ஆகவே, அநேகமாய் எல்லா மத்திய பாங்குகளிலும் தனி அங்கத்தினர்களும், மேற்படி பாங்குகளிலிருந்து கடன் வாங்கும் சங்கங்களும் ஒன்றுசேர்ந்து பங்கெடுத்



திருக்கின்றன். நிர்வாகத்தில் ஒரு குறித்த பிரதிநிதித்துவம் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அநேகவிதங்களில் மெச்சத் தகுந்த ஏற்பாடு. ஏனென்றால், சங்கங்களை கூட்டுறவு விஷயங்களில் கற்பிப்பதல்லாமல் அவைகளின் கோரிக்கைகள் ஒருவாறு திருப்தி செய்யப்படுகின்றன. வியாபார முறையில் அனுபோக முதிர்ச்சியுடையவர்களும் நிர்வாகத்தில் இருக்கின்றார்கள். இவர்கள் இராவிடில் பொதுஜனங்கள் பாங்குகளில் அவ்வளவு நம்பிக்கை வைக்க இடந்தராது.

## மாகாண பாங்கு

இதுகாறும் சொல்லப்பட்ட மத்திய பாங்குகளுக்கு மேலே சென்னை மத்திய அர்பன் பாங்கு என்கிற ஒரு மாகாண பாங்கு இருக்கிறது. இது ஜில்லா மத்திய பாங்குகளால் கடன் கொடுக்கப்படாத சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதல்லாது ஜில்லா மத்திய பாங்குகளுக்கு அவற்றின் வரவுக்கும் கொடுக்கலுக்கும் நிதி போதுமானதாயிராதபக்ஷத்தில் அவைகளுக்குக் கடன் கொடுக்கிறது. மேலும், இந்த பாங்கு ஜில்லா மத்திய பாங்குகளில் தங்களுடைய செலவிற்கு மேலே பணம் இருக்கும் பக்ஷத்தில் அந்த அதிக பணத்தை ஒரு சாதாரண வட்டிக்கு வாங்கி அத்தொகையை பணமுடையாயிருக்கும் ஜில்லாக்களிலுள்ள மத்திய பாங்குகளுக்குக் கொடுக்கிறது. சங்கங்களும், மத்திய பாங்குகளும் இதின் அங்கத்தினர்கள். அவைகளுக்கு நிர்வாகத்தில் ஒரு குறிப்பிட்ட குறைந்த பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## லோகல் யூனியன்கள்

மத்திய அல்லது மாகாண பாங்கு ஒரு பக்கம், சங்கங்கள் மற்றொரு பக்கம். இவைகளுக்கு சம்பந்தம் லோகல் யூனியனால் ஏற்பட்டிருக்கிறது. ஒற்றுமையே பலமுடைத்து என்னும் உண்மை சங்கங்களுக்கேயல்லாமல் சங்கங்களில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்களுக்கும் பொருத்தமுடையது என்பதை கூட்டுறவாளர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களாக சங்கங்கள் ஒன்றையொன்று மேற்பார்வை செய்துகொள்ளுவதற்காக பலவிதமாய் ஒன்றுசேர்ந்து யூனியன்கள் என்று அழைக்கப்படுகின்றன. அப்படி ஒன்றுசேர்ந்திருப்பதில் லோகல் யூனியன் என்பது மிகவும் விருத்திகரமுடையதாய் காணப்படுகிறது. ஒரு சங்கத்தின் அங்கத்தினர்கள் மற்றொரு சங்கத்தின் அங்கத்தினர்களின் தன்மையைப்பற்றியும் நிலைமையைப்பற்றியும் அறிந்துகொள்ளக்கூடிய அவ்வளவு சமீபமாயிருக்கிற 20 அல்லது 30 சங்கங்கள் ஒன்றுகூடியதற்கு லோகல் யூனியன் என்று பெயர். அதிலே சேர்ந்துள்ள சங்கங்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிறிய கமிட்டியால் அது நடத்தப்படுகிறது. அந்த யூனியன் சம்பளம் கொடுத்து ஒரு சூபர்வைசரை நியமித்துக்கொள்ளுகிறது. சூபர்வைசர் சங்கங்களை பார்வையிடுவதும், அவைகளுக்கு புத்தி புகட்டுவதும், அவைகள் செய்யும் வேலையைப்பற்றி யூனியனுக்குத் தெரிவிப்பதும் அவருடைய கடமையாகும். சங்கங்கள் நன்றாய் வேலை செய்கின்றனவா, தவணை பிரகாரம் கடனைத் திருப்பிச் செலுத்துகின்றனவா என்னும் பொறுப்பை யூனியன் வகிக்கிறது. சங்கங்கள் ஒரு சிறிய பங்குத் தொகையை யூனியனுக்குச் செலுத்துகின்றன. சங்கங்கள் தாங்கள் வேலை செய்யும் மூலதனத்தின்பேரில் செலுத்தும் உதவிப் பணத்தைக்கொண்டும், பணம் கொடுக்கும் பாங்கிகள் சங்கங்களுக்குக் கடன் கொடுத்திருக்கும் பணத்திற்கு ஏற்றபடி கொடுக்கும் உதவி பணத்தைக் கொண்டும் யூனியன்கள் தங்களுடைய செலவைச் செய்கின்றன.

## கூட்டுறவு வியாபார விதி

முன்போந்த பிற காரணங்களிலே நாணயச் சங்கங்களை ஏற்படுத்துவது, அவைகளுக்குப் பணம் கொடுப்பது, அவைகளைத் தணிக்கை செய்வது என்பவைகளைப்பற்றிய விபரம் ஒருவாறு சுருக்கிச் சொல்லப்பட்டது. வாஸ்தவத்தில் முன் சொல்லியதுபோலவே இந்த தேசத்தில் கூட்டுறவு முக்கியமாக கடன் வாங்குவதற்காகவே நாடப்பட்டது. ஆனால், ஒற்றுமையே பலம் என்னும் விதியைபல காரணங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடும். மற்ற தேசங்களிலோ கடன் வாங்கல் நீங்கலாக மற்ற வேலைகளே கூட்டுறவாளருடைய முக்கிய குறியாக இருக்கிறது. சென்ற சில வருஷங்களாக இந்தியாவிலும் கூட்டுறவு முயற்சிகள் கொடுக்கல் வாங்கல் தவிர மற்ற விதங்களிலும் செய்ய மிகவும் விருப்பம் காட்டப்படுகிறது. சுலபமான வட்டிக்குப் பணம்

கொடுத்தல் அல்லாமல் வேறு விதமாக கூட்டுறவு ஏழைகளுக்கும் பலஹீனர்களுக்கும் உதவியாயிருக்கிறது. ஒன்றுசேர்ந்து வாங்குதல், ஒன்றுசேர்ந்து விற்றல் என்பது கூட்டுறவு வியாபாரத்தின் கோட்பாடாகும். உலகத்தில் வியாபாரம் மொத்த மொத்தமாய்ச் செய்யப்படுகிறது. நெல்லூரிலிருந்து சென்னைக்கு விற்க ஒரு படி அரிசியையும், டாஸ்மேனியாவிலிருந்து லண்டன் நகரத்திற்கு விற்க ஒரு கூடை ஆப்பிளையும் அனுப்புவதில்லை. ஆகவே, ஏற்றுமதிக்காக சாமான்களைச் சிறுசிறு பாகங்களாக ஒன்றுசேர்த்து மொத்தமாய் ஏற்றுமதி செய்யும் வியாபாரியிடம் கொடுப்பது தரகருடைய வேலையாயிருக்கிறது. ஏற்றுமதி செய்யும் வியாபாரி இன்னும் அதிகமாய்ச் சேர்த்து ஏற்றுமதி செய்கின்றான். அதுபோலவே இறக்குமதியாகும் சாமான்களை தரகர் ஒருவர் மொத்தமாய் இறக்குமதி செய்யும் வியாபாரியிடமிருந்து வாங்கி, வாங்கப் பிரியமுள்ளவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தல் வேண்டும். இங்கு தரகர் என்பது ஒரு கடைக்காரன், சிறிய வியாபாரி, ஏஜண்டு அல்லது மத்தியஸ்தன் எனலாம். அவன் தான் எடுத்துக்கொள்ளும் கஷ்டத்திற்கு இலாபத்தை எதிர்பார்க்கிறான். பலமுறையும் அவன் அதிக லாபத்தைப் பெறுவதால் சாமான்களைப் பயிர் செய்து உண்டாக்கினவன் தான் விற்க நினைத்த விலைக்குக் குறைவாக விற்கவும், வாங்குகிறவன் தான் வாங்க நினைத்த விலைக்கு அதிகமாக வாங்கவும் நேரிடுகிறது. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள், அங்கத்தினர்கள் தாம் விற்கவேண்டிய விளைபொருள்களை ஒன்றுசேர்த்து விற்கவும், அங்கத்தினர்கள் வாங்கப் பிரியப்படும் சாமான்களை ஒன்றுசேர்த்து வாங்கி பகிர்ந்துகொள்ளவும் செய்கின்றன. இவ்விதங்களினால் சங்கங்கள் மத்தியஸ்தர்களை அநேகமாய் நீக்கி அவர்கள் அடைந்த இலாபத்தை அங்கத்தினர்கள் அடையும்படி செய்கின்றன. இம்முறைகளிலே இலாபமடைவது வியாபாரம் நடத்தப்படுகிற திறமையைப் பொருந்தியிருக்கிறது, வியாபாரத் துறைகளும், நானாவித வியாபாரமுறைகளும் நன்கு தெரிந்தாலொழிய இதில் அதிக தேர்ச்சி அடைவது இயலாது.

### கூட்டாய் வாங்குதல்

பண்டசாலைகள்:—இந்த ராஜதானியில் பல பண்டசாலைச் சங்கங்கள் இருக்கின்றன. இவை கூட்டுறவு வியாபாரத்தின் மாதிரியை நன்கு எடுத்துக் காட்டும். இந்த சங்கங்கள் பங்குத் தொகையின்பேரிலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பின் பேரிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுப்பதற்காக கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை, மொத்தமாகவும், தகுந்த காலங்களிலும் சாமான்களை சகாயமாய் வாங்கி அங்கத்தினர்களுக்கு அக்காலத்து கடைவிலைக்குக் குறைவாய் சாமான்களைக் கொடுக்கப் பிரயத்தனப்படுகின்றன. இவை, தாழ்ந்த சரக்குகளுடன், கலப்பு, பொய் நிறை, தப்பு அளவை இவைகளைக் கையாளும் சில சாதாரண வியாபாரிகளின் சூதுக்கு உட்படாமல் காக்கின்றன. சில பண்டசாலைகள் நன்றாய் வேலை செய்கின்றன. குறிப்பிடக்கூடியது சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி சங்கம் என்பது தான்.

நாணயச் சங்கங்கள் மூலமாய் ஒப்பந்தத்தின் பேரில் வாங்குவது:—இதுவரையில் கிராமவாசி மொத்தமாய் வாங்குவதினால் உண்டாகும் நன்மையை அறியவில்லை. சென்ற ஒன்று இரண்டு வருஷங்களாகத்தான் சில சோதனைகள் இந்தவிதத்தில் செய்யப்பட்டு வருகின்றன. சில கிராம பண்டசாலை சங்கங்கள் இருக்கின்றன. இவை திருப்திகரமாய் வேலை செய்ததாக ருசுவாகவில்லை. சாதாரண கிராம சங்கங்களில் அவ்வித சங்கங்களை நடத்தப்போதுமான சாமார்த்தியமுள்ளவர்கள் இருக்கின்றார்களா என்பது சந்தேகிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் சாதாரண நாணயச் சங்கத்தின் மூலமாக கிராமவாசிக்கு மொத்தமாய்ச் சேர்த்து வாங்குவதினால் உண்டாகும் நன்மையை அறியச் செய்யலாமென நம்பப்படுகிறது. ஒரு நாணயச்சங்கம் தன் கணக்கிலேயே சாமான்களை வாங்கச் செய்வதானது அதின் நிலையை அபாயத்திற்குக் கொண்டுவருவதாய் முடியுமென எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அநேக சங்கங்கள் சில சாமான்களை மொத்தமாக அங்கத்தினர்களின் ஏஜண்டாக நின்று வாங்கி சாமான்கள் வந்ததும் அங்கத்தினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கின்றன. இவ்விதம் வாங்கும் சாமான்களுக்கு, அங்கத்தினர்கள் உடனே ரொக்க-



மாகவோ அல்லது சாமான்களை வாங்கும்பொருட்டு சங்கங்களில் கடன் வாங்கியோ அல்லது இருவகையாலுமோ விலை கொடுக்கப்படுகிறது. இவ் வேற்பாட்டினால் பழுதுபோவதினால் உண்டாகும் அபாயம் விற்காமல் கையில் நின்றுவிடும் சாமான்கள், அங்கத்தினர்கள் விலையைக் கொடுக்கத் தவறுவதினால் நேரிடும் வட்டி நஷ்டம் இவைகள் சங்கங்களைச் சார்வதில்லை. இப்போதுதான் சில வியாபார யூனியன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஆதாரம் பங்குத் தொகையும் வரையறுக்கப்பட்ட பொறுப்புமாகும். அவைகளில் சங்கங்களும் தனித்த அங்கத்தினர்களும் பங்குதாரர்களாகச் சேரலாம். இவ்வித வியாபார யூனியன்கள் தங்களைப் பார்வையிடுவதற்குத் தகுதியுடையவர்களைப் பெறக்கூடுமென்றும், தனி அங்கத்தினர்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுக்கும் பிரதம சங்கங்கள் தாம் வாங்குவதைவிட இலாபகரமான விலைக்கு இந்த யூனியன் வாங்கி மேற்படி சங்கங்களுக்குக் கொடுக்கக்கூடுமென்றும் நம்பப்படுகின்றது. இந்த வியாபாரத்தை திருப்திகரமான நிலைக்குக்கொண்டுவர தீர்க்க யோசனையும் ஏற்பாடும் வேண்டுவது அவசியம் என்பது வெளியாகிறது. சில நெசவு சங்கங்கள் மொத்தமாய் நெசவுக்கு நூல் வாங்கப் பிரயத்தனப்பட்டன. அனுபோகக் குறைவினாலும், விலையின் மாறுதல்களினாலும், இச்சங்கங்கள் விருத்திபெறவில்லை.

### கூட்டாய் விற்பனை

கூட்டாய் வாங்குவதிலும் கூட்டாய் விற்பனை செய்வது குறைவாகவே இருக்கிறது. சாதாரண விவசாய விளைபொருள்களை விற்க யாதொரு கூட்டுறவு ஏற்பாடும் செய்யப்படவில்லை. தென்கன்னடம் கார்டன் பிளாண்டர்ஸ் சங்கம் கொட்டைப்பாக்கையும், தோட்டவிளைபொருள்களையும் திருப்திகரமாய் விற்க ஆரம்பம் செய்திருக்கிறது. இதில் சில வியாபாரங்கள் நல்ல இலாபத்துடன் நடைபெற்றன. ஒருக்கால் முன்னே சொல்லப்பட்ட வியாபார யூனியன்கள் இந்தவிதத்தில் பிரதம சங்கங்களுக்கு உதவி செய்யக்கூடும்.

### பிரத்தியேகச் சங்கங்கள்

விசேஷித்தவிதமான சில சங்கங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி சுருக்கமாய் சொல்லுங்கால் அவை செய்யும் வேலையோ நாணயச் சங்கம் செய்யும்வேலை, விவசாயச் சங்கம் செய்யும் வேலை, அல்லது இரண்டு சங்கங்களும் சேர்ந்து செய்யும் வேலையாக இருக்கின்றது. இவைகள் தான் கட்டிடச் சங்கங்களாகும். இவை வரையறுக்கப்பட்ட பொறுப்பின் பேரிலும் பங்குத் தொகையின்பேரிலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நாணயச் சங்கத்தை மொத்தத்தில் ஒத்திருக்கின்றன. இவைகளின் முக்ய வேலை வீடுகட்ட கடன்கொடுப்பதாகும். அத்தகைய கடன் நீடித்தகால அளவையுடையன.

### சங்கங்களை உண்டாக்குதலும் பதிவு செய்தலும்

கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவு இலாக்காவைச் சேர்ந்த உப ரிஜிஸ்திராருக்குக் குறைவுபடாத உத்தியோகஸ்தரால் பதிவு செய்யப்படுகின்றது. இந்த இலாக்காவின் மேற்பார்வை கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்தராரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய உத்தியோகஸ்தானம் சென்னை. அவருக்கு உதவியாய் ஓர் உத்தியோகஸ்தருண்டு. ஒவ்வொரு உப ரிஜிஸ்தராரின்கீழ் அநேக இன்ஸ்பெக்டர்கள் வேலை செய்கிறார்கள். உப ரிஜிஸ்தராருக்கு இலவசமாய் வேலைசெய்யும் பொது நன்மையை நாடிய கௌரவ ஆர்கனைசர்கள், கௌரவ உப ரிஜிஸ்தரார்கள் உதவி செய்கின்றார்கள். இவ்வுதவியினால் அவர்களுடைய வேலை மிகவும் குறைவுபடுகிறது. சங்கங்களை ஏற்படுத்த மனுக்களும், கூட்டுறவு சம்பந்தமான வினாக்களும் அந்தந்த உபரிஜிஸ்தராருக்கு அனுப்பப்பட வேண்டும். நன்றாய் வேலை செய்யலாம் என்னும் நம்பிக்கை நியாயமாய் ஏற்பட்டாலொழிய சங்கங்கள் பதிவு செய்யப்படமாட்டா. சங்கங்களை ஸ்தாபிப்பதில் அதிக பொறுமையும், கிராமங்களில் போதனை செய்யும் தைரியமும் வேண்டும். இவ்வேலையானது உபரிஜிஸ்தராராலும், அவருடைய இன்ஸ்பெக்டராலும், சூப்பர்வைசிங் யூனியனின் உத்தியோகஸ்தராலும், அதின் சிப்பந்திகளாலும், கௌரவ ஆர்கனைசர்களாலும், கௌரவ உப ரிஜிஸ்தரார்களாலும் செய்யப்படுகிறது. ஒரு சாதாரண கூட்டுறவு சங்கத்தின் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்ட ஒன்று இரண்டு வருஷங்களில் ஜாக்கிரதையாய் நிறுவப்பட்டதின்

பேரிலும், ஜாக்கிரதையாய் மேற்பார்வை செய்யப்படுவதின் பேரிலுமே சாரும்.

### வேலை முறை

ஒரு சாதாரண நாணயச் சங்கம் வேலைசெய்ய ஆரம்பிக்கும் விதத்தைப்பற்றிய ஒரு குறுகிய விபரம் அனைவரும் அறிய விரும்புவார்களென எண்ணப்படுகிறது. சங்கத்தில் சேர விரும்புகிற குறைந்தது 10 மெம்பர்கள் சங்கம் ஒன்று பதிவு செய்ய வேண்டுமென ஒரு விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும். பதிவு மனுவிலும், நிபந்தனைகளின் நகலிலும் எல்லா மனுதாரர்களும் கையெழுத்திட வேண்டும். சங்கம் நன்றாய் வேலை செய்யுமென்றும் மனுதாரர்கள் தாங்கள் மேற்கொள்ள விரும்பும் கடமைகளையும் பொறுப்பையும் அறிந்து கொண்டிருக்கிறார்களென்றும் உப ரிஜிஸ்திராருக்குத் திருப்தியுண்டானால் அந்த சங்கம் தம்முடைய ஆபீஸ் ரிஜிஸ்தர்களில் பதிவு செய்யப்பட்டு பதிவு செய்த சர்டிபிகேட் ஒன்று தயாரிக்கப்பட்டு அது அவரால் கையெழுத்திடப்படும். பிறகு மனுதாரர்களுடைய கூட்டமொன்று கூடும். அக்கூட்டத்திற்கு கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தராவது, கௌரவ ஆர்கனைசராவது, அல்லது கௌரவ உப ரிஜிஸ்திராராவது வந்திருப்பார். மனுதாரர்களிலிருந்து ஒரு அக்கிராசனர் தேர்ந்தெடுக்கப்படுவார். கூட்டத்தின் நோக்கங்களும், கூட்டுறவின் நன்மைகளும், விஸ்தாரமாகச் சொல்லப்படும். நிபந்தனைகளும் பதிவு சர்டிபிகேட்டும் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்படும். பிறகு சங்கம் தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. பூர்வ்க மனுதாரர்கள் அது காரணத்தினாலேயே சங்கத்தின் மெம்பர்களானதால் ஒரு பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். கூட்டத்தின் நடவடிக்கைகள் எழுதப்பட்டு அக்கிராசனரால் கையெழுத்து செய்யப்படுகிறது. பிறகு பஞ்சாயத்துக் கூட்டமொன்று நடைபெறுகிறது. அதில் இன்னும் சேர விரும்புகிறவர்களுடைய விண்ணப்பங்களும், அங்கத்தினர்களுடைய கடன் விண்ணப்பங்களும் ஆலோசிக்கப்படுகின்றன. பங்குத் தொகையும் பிரவேசக் கட்டணமும் வசூலிக்கப்பட்டு அவை சாதாரணமாய் சிறு கடன்களாக அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அங்கத்தினர்களாவது அல்லது அனுதாபமுடையவர்களாவது டிபாசிட் செய்தால் அவைகளும் இவ்விதமே உபயோகிக்கப்படுகிறது. ஆனாலும் பஞ்சாயத்தார் கொடுக்கத் தீர்மானித்த கடனின் பெரும்பாகம் உள்ளூர் மத்திய பாங்கியிலிருந்து பெறப்படுகிறது. அந்த பாங்கிக்கு பஞ்சாயத்தார் ஒரு கடன் விண்ணப்பம் அனுப்புதல்வேண்டும். அத்துடன் எல்லா அங்கத்தினர்களுடைய ஆஸ்தி பொறுப்புப்பட்டியல் அனுப்பப்படவேண்டும். சாதாரணமாய் இந்தக் கூட்டத்திலேயே இந்த சங்கத்தை லோகல் சூப்பர்வைசிங் யூனியனிலும், லோகல் மத்திய பாங்கியிலும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி தீர்மானங்கள் செய்யப்படவேண்டும்.

### கூட்டுறவால் விளையும் நன்மைகள்

கூட்டுறவு முயற்சிகளால் அனுபவிக்கப்படுகிற பிரத்தியட்ச லாபங்களும் எதிர்பார்க்கக்கூடிய லாபங்களும் வெளிப்படையாயத் தெரிகின்றன. ஜனங்கள் ஒன்று சேருவதினால் முக்கியமாய் கூட்டுறவு சங்கங்களின் கிராமத்து ஜனங்கள் ஒன்று சேருவதினால், அவர்கள் விலையேறப்பெற்ற போதனைகள், சுய உதவி, சுய நம்பிக்கை, சுயமரியாதை, ஒருவரை ஒருவர் நம்புதல், ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்தல் ஆகிய இவைகளைப் படித்துக் கொள்வதல்லாமல் முக்கிய போதனைகளாகிய காலந்தவறாமல் செலுத்துதல், வியாபார முறைகளில் பயிற்சி இவைகளையும் அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது இந்த ராஜதானியின் அனுபவமாயிருக்கிறது. பொதுஜனப் பகுதியின் நீதி முன்னேற்றத்திற்காகவும் செல்வ முன்னேற்றத்திற்காகவும் மிக உயர்ந்தவர்களும், மிக தாழ்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து ஜனசமூதாய சேவையில் ஈடுபட்டு வேலைசெய்ய கூட்டுறவு இடம் தருகிறது. கூட்டுறவு இபக்கத்தின் இந்த அம்சங்கள்தான் பொது ஜனங்களின் உதார குணத்தைப் பற்றுகின்றன. இது காரணமாக எங்குபார்த்தாலும் இதில் முயற்சியும் எல்லா வகுப்பாரும் இம்முயற்சியில் ஊக்கமும் கொண்டிருக்கின்றார்கள்.

---



# இந்தியாவில் ஐக்கிய ஆட்சி

## விசேஷ கூட்டுறவுச் சங்கங்கள்

**பணம்** கொடுக்கல் வாங்கலல்லாத ஏனைய வகையில் வேலைசெய்யும் சங்கங்கள் பல இந்தியாவில் இருக்கின்றன. அச்சங்கங்களை அவற்றின் வேலையிலிருந்து நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. அத்தகைய சங்கங்களில் குறிப்பிடத்தக்கன கூட்டாய் விற்பனை செய்யும் சங்கங்கள், கூட்டாய் வாங்கும் சங்கங்கள், கைத்தொழில் சங்கங்கள், கண்டிராக்ட் எடுக்கும் சங்கங்கள், மேம்படு வாழ்க்கை நடத்தும் சங்கங்கள் முதலியனவாகும்.

### கூட்டாய் விற்பனை

டென்மார்க்கு, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளில் உள்ளதுபோல் இங்கு கூட்டாய் விற்பனை செய்யும் சங்கங்கள் பிரபல்யமாக இல்லை. இந்திய விவசாயிகள் முன் கூறப்பட்ட நாடுகளைப்போன்று கூட்டாய் விற்பனை செய்யும் முறையைக் கையாண்டால் பெரிதும் நன்மையடையலாம். விவசாயிகளின் விளைபொருள்களை அதிக விலைக்கு விற்க வழிகாட்டினால்தான் அவர்களது வாழ்க்கை நிலை மேம்பாடடையும். இன்றையதினம் ஐக்கிய நாணயச் சங்கங்கள் சீர்கேடடைந்திருப்பதற்குக் காரணம் விவசாயிகளின் விளைபொருள்கள் நல்ல விலைக்குப் போகாமையேயாகும். விவசாயிகளுக்கு கேட்டபோதெல்லாம் பணத்தைக் கடனாகக் கொடுத்தால் மாத்திரம் அவர்களது கஷ்டம் தீராது. அவர்களது சாமான்களை விற்றுக்கொடுக்கவும், அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யவும் ஓர் ஸ்தாபனம் வேண்டும். இன்றையதினம் விவசாயிகள் அநேகர் லேவாதேவிக்காரர்களிடம் அடிமைகளாகவிருக்கக் காரணம் விவசாயப் பொருளை விற்கவோ அல்லது வாங்கவோ ஓர் ஸ்தாபனம் இல்லாமையேயாகும். ஓர் விவசாயி தனது விளைபொருளைக் கொண்டு லாபமடைய முடியாமைக்குக் காரணம் அவனது லாபத்தை கடன்காரன் சாப்பிட்டுவிடுவதேயாகும். அவன் தனது சரக்கை விற்பனை செய்யமுடியாத நிலையிலிருக்கிறான். அதுசமயம் கடன்காரன் அவனை நிர்பந்தஞ்செய்கிறான். அவனது நிர்பந்தம் தாங்கமுடியாமல் குறைந்த விலைக்கு தனது சாமானை விவசாயி கிரயம் செய்கிறான். ஏதோ இரண்டொரு விவசாயிகள்தான் தங்களின் விளைபொருள்களை நல்ல விலைக்குக் கொடுத்துப் பயனடைகிறார்களே யன்றி பெரும்பாலோர் குறைவான விலைக்கே விற்கின்றனர். அநேகமாக ஐக்கிய நாணயச் சங்கங்கள்தான் இந்நாட்டில் சாமான்களை விற்பனை செய்யும் வேலையைச் செய்கின்றன. சென்னையிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் சில விளைபொருள்களை விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்காவிடினும் விவசாயிகளுக்கு ஓர் உதவியைச்செய்கின்றன. அவன் தனது அவசரமான தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும், விலை ஏற்றமான சமயம் வரும்வரை தனது விளைபொருளை வைத்திருந்து லாபத்திற்கு விற்பதற்கும், அவனது விளைபொருளின் பெறுமானத்தில் 100-க்கு 60 பங்குத் தொகையைக் கொடுத்து உதவுகின்றன. இம்மாதிரியான சங்கங்கள் 73 பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1929—30-ல் இந்த முறையில் இச்சங்கங்கள் ரூ. 8·27 லக்ஷம்வரை கொடுத்து உதவியிருக்கின்றன. இம்மாதிரியான சங்கங்களுக்கு அனுகூலமாக தானியக் களஞ்சியங்கள் கட்ட சென்னை சர்க்கார் கடன் கொடுத்திருக்கின்றனர். அதனை மாகாணக் கூட்டுறவுக் கமிட்டியார் ஆமோதித்திருக்கின்றனர்.

### பஞ்சு விற்பனைச் சங்கங்கள்

விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதற்கென பிரத்தியேகமான சங்கங்கள் இந்நாட்டில் இல்லாமலில்லை. பஞ்சுவிற்பனைக்கென பம்பாயிலும், சணல், நெல், கஞ்சா, பால் முதலியன விற்பதற்கு வங்காளத்திலும் சில சங்கங்கள் இருக்கின்றன. பம்பாய் மாகாணத்தில் குஜராத், ஹூப்ளி, கெதக் முதலிய இடங்களில் பஞ்சு விற்பனைச்சங்கங்கள் வெகு நன்றாக வேலை செய்கின்றன. ஹூப்ளி

யிலும் கெதக்கிலும் பஞ்சுவிற்பனைக்கென சங்கங்கள் 1917-ல் ஸ்தாபிக்கப்பட்டன. ஹூப்ளியில் விற்பனையாகக் கூடிய பஞ்சுகளில் 100-க்கு 15 பங்கு கூட்டுறவு சங்கங்களின்மூலம் விற்கப்படுகிறது. ஹூப்ளி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் மூன்று லட்சம் ரூபாய் லாபம் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குஜராத் பஞ்சு விற்பனை யூனியன் இந்நாட்டிலுள்ள விற்பனை சங்கங்கள் யாவற்றினும் முதன்மையானது. இதற்கு 13 கிளைச்சங்கங்கள் இருக்கின்றன. 3000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த யூனியன் வியாபாரிகளின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டது. அநேகமாக பஞ்சுவாங்க விரும்புவோர் இந்த யூனியனில்தான் வாங்குகிறார்கள். 1930-ம் வருஷத்தில் இருபது லெட்ச ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு யூனியன் மூல்யமாக விற்கப்பட்டிருக்கிறது. மைசூர், ஹைதராபாத், சென்னை முதலிய இடங்களில் பஞ்சு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. இத்தகைய சங்கங்களுக்கு உதவிபுரிய சென்னை அரசாங்கத்தார் ஓர் டிப்டி விவசாயடைரக்டரை நியமித்திருக்கின்றனர்.

## சணல் விற்பனைச் சங்கங்கள்

சணல் விற்பனை செய்வதற்கென பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் பஞ்சுவிற்பனைச் சங்கங்களைப் போன்று அவ்வளவு நன்றாக வேலை செய்யவில்லை. 1927௵ அசாமில் சணல்விற்பனைச் சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பொதுஜன ஆதரவின்மையாலும், சர்க்கார் பொருளுதவியின்மையாலும் மார்வாடிகளின் எதிர்ப்பாலும் இச்சங்கம் விருத்தியாகவில்லை. வங்காளத்தில் சணல்விற்பனைச் சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அச்சங்கமும் வெற்றி பெறவில்லை. இதற்குக் காரணம் அடிக்கடி சணல் விலையில் மாறுதல் ஏற்படுவதாகும்.

## கஞ்சா விற்பனைச் சங்கங்கள்

வங்காளத்தில் நியோகன் என்ற கிராமத்தில் கஞ்சா விவசாயிகளால் ஸ்தாபிக்கப்பட்ட கஞ்சா விற்பனை சங்கம் திருப்திகரமாக நடந்துவருகிறது. கஞ்சாவிற்பனை பூராவும் இச்சங்கத்தின்மூலமாகவே நடைபெறுகிறது.

## நெல் விற்பனைச் சங்கங்கள்

நெல் விற்பனைச் சங்கங்கள் சில வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் நடக்கும்விற்பனையால் அதிகலாபம் கிடைக்கவில்லை. எனினும் நெல்விற்பனைச் சங்கங்கள் விருத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1927ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய நெல்விற்பனைச் சங்கம் அந்த வருஷத்தில் மூன்று லெட்சரூபாய்க்கு வியாபாரம் செய்திருக்கிறது.

## பால் விற்பனைச் சங்கங்கள்

பால் விற்பனைச் சங்கங்கள் வங்காளத்தில் சிறப்பாக வேலை செய்கின்றன. சுமார் 150 சங்கங்கள்வரை இன்று இருப்பதாகத் தெரிகிறது. நவீன முறையில் பால் கெடாமல் காக்கப்படுகிறது. கல்கத்தா பால் சங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள யந்திரங்கள் நாட்டிலேயே மிக நேர்த்தியானதாகும். 1929-௵ சுமார் 5 லெட்சரூபாய்க்கு மேல் பால் வியாபாரம் நடந்திருக்கிறது. சங்கத்தின் மூலம் பால் விற்பனை செய்வோர் பொருளாதார நிலையில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். தங்கள் கடன்களைத் தீர்த்திருக்கின்றனர்: நல்ல மாடுகள் வாங்கி வைத்திருக்கின்றனர்; வசதியான கொட்டகைகள் கட்டி இருக்கின்றனர்; தவிரவும் மிச்சம் பிடித்து பாங்கிகளில் போட்டுவைத்திருக்கின்றனர். பால் சங்கங்கள் நன்றாக வேலைசெய்ததின் பயனாக பால்சங்கங்களைக் கண்காணிக்கும் பொருட்டு ஓர் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார் அவருடைய வேலை பால்சங்கங்களின் முன்னேற்றத்திற்காக வேலைசெய்வதாகும். டார்ஜ்லிங் என்ற இடத்தில் வெண்ணை, நெய் உற்பத்தி செய்யும் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் யாவும் லாபகரமாக நடந்துவருகின்றன. நாட்டு வெண்ணையைவிட சங்கத்தின்மூலம் விற்கப்படும் வெண்ணைக்கு அதிக மதிப்பு இருக்கிறது. சங்கத்தின் வெண்ணை நாட்டு வெண்ணையைவிட 100க்கு 75 அதிக விலைக்குப் போகிறது. இதனால் உயர்தரப் பசுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

கல்கத்தாவில் உள்ளதுபோல் சென்னையில் ஓர் பால் சங்கம் நடத்தப்படுகிறது. பால் விற்



பனையில் அச்சங்கத்திற்கு 1929-௵ ரூ. 1,56,754 கிடைத்திருப்பதாகத் தெரிகிறது, இச் சங்கம் கிராமவாசிகளுக்குப் பணம் கொடுத்து நல்ல மாடுகள் வாங்க உதவுகிறது. சுகாதார முறைப்படி பால் காப்பாற்றப்படுகிறது. கிராமங்களிலிருந்து அன்றாடம் மோட்டார் லாரி மூலம் பால் நகரத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

கல்கத்தா, சென்னை முதலிய இடங்களிலுள்ள பால் சங்கங்களில் உற்பத்தி செய்வோர் மாத்திரம் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆனால் சில இடங்களில் பால் வாங்குவோர் மாத்திரம் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். சூரத்திலுள்ள பால் சங்கத்தில் பால் உற்பத்தி செய்வோரும் வாங்குவோருமாக அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவ்விதம் ஒரு சங்கத்தில் இரு சாராரும் அங்கத்தினர்களாக இருப்பது சங்கத்தின் வேலைக்குக் கஷ்டமாக இருப்பதாக அனுபவத்திலிருந்து தெரிகிறது. இம்மாதிரியான பால் சங்கங்கள் விருத்தியாக மார்க்கமிருக்கிறது. ஆனால் ஆங்காங்குள்ள நகரசபைகள் இது விஷயத்தில் அக்கரை காட்டவேண்டும். மாட்டுக் கொட்டகைகள் அமைக்கப் பொருளுதவி செய்யவேண்டும். சங்கங்களுக்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்து உதவிபுரிய வேண்டும். மேலும், உற்பத்தி செய்வோரும், வாங்குவோரும் ஊக்கமெடுத்துக்கொள்ளவேண்டும். பரோடா சமஸ்தானத்தில் விற்பனை செய்வோரும், வாங்குவோரும் பால் சங்கத்தைப் புறக்கணிப்பதால் அங்கு பால் சங்கத்தை நடத்த முடியவில்லை என ரிஜிஸ்திரார் அறிக்கைமூலம் தெரிகிறது.

## நெய் விற்பனைச் சங்கங்கள்

ஐக்கிய மாகாணத்தில் நெய் விற்பனைச் சங்கங்கள் நன்றாக நடைபெறுகின்றன. இந்த மாகாணத்தில் ஐந்து நெய்விற்பனை சங்கங்கள் நடக்கின்றன. இச் சங்கங்கள் சில்லரையாக நெய்வாங்கி அவற்றை அங்கத்தினர்களுக்கு விற்பனை செய்கின்றன. கிடைக்கக்கூடிய லாபம் அங்கத்தினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

## சர்க்கரை விற்பனைச் சங்கங்கள்

சர்க்கரை விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் பல நாட்டில் நடைபெறுகின்றன. 1929ல் ஐக்கியமாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சங்கம் லாபகரமாக நடந்து வருகிறது.

## ஏலக்காய் விற்பனைச் சங்கங்கள்

மைசூரில் கூட்டுறவுச் சங்கங்கள் பலதுறையிலும் நன்றாக வேலைசெய்கின்றன. இங்குள்ள ஏலக்காய் விற்பனைசெய்யும் சங்கம் மிகவும் விசேஷமானது.

## முட்டை விற்பனைச் சங்கங்கள்

முட்டைகளை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் நாட்டின் நாலு பாகங்களிலும் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் மார்த்தாண்டம் என்னும் இடத்தில் யௌவன கிறிஸ்துவ வாலிப சங்கத்தார் கூட்டுறவு முறையில் நடத்தும் முட்டை வியாபாரம் மெச்சத்தக்கது.

## சில குறைபாடுகள்

பாஞ்சாலத்தில் கூட்டுறவுமுறையில் விற்பனை செய்யும் சங்கங்களுக்கு ஆதரவு இருந்து வருகிறது. 1929-30ல் ஓர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 13 லெட்ச ரூபாய் பெறுமான சரக்கை விற்பனை செய்திருக்கிறது. மத்திய மாகாணத்திலும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் திருப்திகரமாக நடந்து வருகின்றன. பெரும்பாலும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பற்பல கஷ்டங்களுக்கு மிடையே வேலை செய்யவேண்டி இருக்கிறது. அங்கத்தினர்கள் மனமாற்றமும், சுயநலமும் இச் சங்கங்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாகும். போக்குவரத்து சாதனம் போதாமையும், குறைந்த அளவான உற்பத்தியும், கிடங்குகள் வசதியின்மையும், நிறை, அளவு முதலியன நாடு பூராவும் ஒரேமுறையில் இல்லாமையும், சரக்குகளைத் தரவாரியாகப் பிரிக்கும் பழக்கம் அங்கத்தினர்களிடமில்லாமையும் கூட்டுறவு விற்பனைக்குத் தடையாக இருக்கிறது. இம்மாதிரியான குறைகளை சங்கங்கள் நிவர்த்திசெய்வது சாமான்யமல்ல. இவை யாவற்றினும் மிகப்பெருங்குறையாகவுள்ளது சங்கங்கள் திறமைசாலிகளால் நிர்வாகஞ் செய்யப்படாமையாகும். நவீனமுறையில் வியாபாரத்தை நடத்த அனுபவமும் சாமார்த்தியமும் நிறைந்த நிர்வாகஸ்தர்கள் வேண்டும். விவசாயி உயர்த்த

பொருளை விளைவிக்கலாம்; தொழிலர்ளி நல்ல சாமான்களை உற்பத்தி செய்யலாம். ஆனால் அவற்றையெல்லாம் லாபகரமாக விற்பனை செய்ய சாமார்த்தியமான நிர்வாகஸ்தர்களடங்கிய விற்பனைச் சங்கங்கள் அத்தியாவசியமானவை. சாமர்த்தியமான மானேஜர்களின் அவசியத்தை இந்திய கூட்டுறவுச் சங்கங்கள் புறக்கணித்திருக்கின்றன. சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்ற காரணத்தினால் அனுபவமற்றவர்கள் கையில் இந்திய சங்கங்கள் ஒப்படைக்கப்பட்டிவிக்கின்றன. பலவிடங்களில் சங்கத்தின் அங்கத்தினர்களில் ஒருவர் மானேஜராக இருந்து நிர்வாகம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. அங்கத்தினர்களாக இருப்போர் வியாபாரமுறை தெரிந்தவர்களாக இருப்பவர்களென சொல்லமுடியாது. இம்மாதிரியான காரணங்களால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பெரிதும் சீர்கேடடைந்திருக்கின்றன. இக்குறைகளைக் கூட்டுறவாளர்கள் கவனித்து சீர்திருத்தஞ் செய்தால் கூட்டுறவு விற்பனைச்சங்கங்கள் வளர்ச்சி பெறுமென்பதில் ஐயமில்லை.

## கூட்டாய் வாங்குதல்

கூட்டுறவு முறையில் மேல்நாடுகளில் நடத்தப்படும் சங்கங்களில் கூட்டாய் வாங்கும் சங்கங்கள் சிறந்து விளங்குகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் இவை சிலாக்கியமானவை. ஆனால், இந்தியாவில் இச்சங்கங்கள் போதிய அளவு வெற்றி பெறவில்லை எனலாம். கைத்தொழில் சங்கங்கள் என்பன பதனிடாத பொருள்களை மொத்தமாக வாங்குகின்றன. இன்னும் சில ஐக்கிய நாணயச் சங்கங்கள் . அங்கத்தினர்களுக்குத் தேவையான சாமான்களை மொத்தமாக வாங்கி பிரித்துக் கொடுக்கின்றன. ஐக்கிய மாகாணத்தில் கூட்டாய் வாங்கி பிரித்துக் கொடுக்கும் வேலையை ஐக்கிய நாணயச் சங்கங்களே செய்து வருகின்றன.

1929-30ல் மைசூர் ஐக்கிய நாணயச்சச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு விதை, எரு, விவசாயக்கருவிகள் வாங்கிக்கொடுத்த வகையில் 6,89,784 க்கு வியாபாரஞ் செய்திருக்கின்றன. இதே வருஷத்தில் சென்னை மாகாணத்திலுள்ள 44 நகரசபை சிப்பந்திகளின் ஐக்கிய நாணயச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு துணி, உணவுப்பொருள் முதலியன வாங்கிக்கொடுத்த வகையில் ரூ. 48,562 க்கு வியாபாரம் செய்திருக்கின்றன. பம்பாயில் தாலூகா சங்கங்கள், பொதுஜன பாங்குகள், பஞ்சு விற்பனைச் சங்கங்கள் முதலியன ஓர் வியாபாரியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு அங்கத்தினர்களுக்கு சாமான்களை வாங்கிக்கொடுக்கின்றன. மாகாண பாங்கின் கிளைஸ்தாபனங்கள் அங்கத்தினர்களுக்குத் தேவையான சாமான்களை மொத்தமாக வாங்கிப் பிரித்துக்கொடுத்து வருகின்றன.

சாமான்களை மொத்தமாக வாங்கிப்பிரித்துக் கொடுக்கும் சங்கங்கள் முதல்முதலில் கிராமங்களில் துவக்கப்பட்டன இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொடுத்து வந்தன. ஆனால் மேக்லியன்கமிட்டியார் விசாரணை நடத்த ஆரம்பித்த காலத்தில் சாமான்களை வாங்கி அங்கத்தினர்களுக்கு பிரித்துக் கொடுப்பதற்கென பிரத்தியேகமான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. பெரும்பாலான சங்கங்கள் வெற்றிகரமாக நடந்ததாகத் தெரிகிறது. ஆனால் நாளாவட்டத்தில் இச்சங்கங்களில் அநேகம் சிதருண்டு போயின. இதனால் இச் சங்கங்களின்பேரில் பொதுஜனங்கள் அவமதிப்பு கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வங்காளத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்கென சில சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. அவைகள் அவ்வளவு திருப்திகரமாக வேலை செய்வதாகத் தெரியவில்லை. அதனால் ஐக்கிய நாணயச் சங்கங்களே இந்த வேலையைச் செய்யலாமென இங்குள்ள பிரபலஸ்தர்கள் அபிப்ராயப்படுகின்றனர்.

கூட்டுறவு ஸ்டோரின் மூல புருஷர் ராக்டேல் என்ற பெரியார். அவர் வகுத்த வழியைப் பின்பற்றி சங்கங்கள் அமைத்து வெற்றி பெற்றவர்கள் பிரிட்டிஷ்காரர்கள். அந்த முறையில் இந்தியாவில் ஸ்டோர்கள் வெற்றியடைந்ததற்குச் சென்னை, மைசூர் ஆகிய இரண்டு இடங்களைத் தான் குறிப்பிட முடியும். திருவல்லிக்கேணி கூட்டுறவு ஸ்டோர் 1905ஆ ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு 25 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. 1930ஆ சுமார் 13 லெட்ச ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது.



7000 அங்கத்தினர்கள். இருக்கிறார்கள். பங்குத் தொகை ரூ. 5. ஓர் அங்கத்தினர் 200 பங்குகளுக்கு மேல் எடுத்துக்கொள்ள அநுமதிக்கப் படுவதில்லை இது. தவிர சென்னை மாகாணத்தில் சாமான்களை வாங்கி விற்பனை செய்யும் சங்கங்களின் எண்ணிக்கை 139. இச் சங்கங்கள் 1929-30ஆ ரூ. 1,76,000 க்கு சாமான்களை வாங்கி விற்பனை செய்திருக்கின்றன. இதுபோல் மைசூரில் கூட்டாக வாங்கும் சங்கங்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றன. 73 சங்கங்கள் சாமான்களை வாங்கி அங்கத்தினர்களுக்கு கொடுக்கும் வேலையையும், நாணயங்கொடுத்து வாங்கும் வேலையையும் சேர்த்து செய்கின்றன. இவற்றின் மூலதனம் ரூ. 11,53,129. இச்சங்கங்கள் ரூ. 9,70,953 பெறுமான சாமான்களை வாங்கி விற்பனை செய்திருக்கின்றன. இச்சங்கங்கள் ரூ. 62,289 லாபமடைந்திருக்கின்றன. இது தவிர ஐக்கிய நாணயச்சங்கங்களுடன் இணைக்கப்பட்ட 26ஸ்டோர்கள் ஒவ்வொன்றும் சராசரி ரூ. 4,29,608க்கு வியாபாரம் செய்திருக்கின்றன. அங்கத்தினர்களுக்கு தேவையான சாமான்களை வாங்கிக்கொடுக்கும் 52 சங்கங்கள் ரூ. 1,25,095க்கு சாமான்கள் விற்பனை செய்திருக்கின்றன.

பம்பாய் மாகாணத்தில் 1929-30ல் 36ஸ்டோர்கள் இருந்தன மத்திய ரயில்வே கம்பெனி ஊழியர்களுக்காக ஆஜ்மீரிலும், டாடாரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்டோர்கள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. ஆஜ்மீரில் ரூ. 40,000க்கும் டாடாரில் ரூ. 12,000க்கும் மாதமொன்றுக்கு வியாபாரம் நடைபெறுகிறது. ஆஜ்மீரில் 3700 அங்கத்தினர்களும், டாடாரில் 3000 அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். 1930-31ல் டாடார் ஸ்டோர் ரூ. 3,000 லாபமடைந்திருக்கிறது. மாட்டுங்காவில் உள்ள தென் இந்திய கூட்டுறவு ஸ்டோர் மிகச் சிறந்ததாகும். 1929-30ல் பங்குத்தொகை ரூ. 4427 ஆக இருந்தது. ரூ. 75,000க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. ரூ 2100 லாபம் கிடைத்திருக்கிறது. பங்குத்தொகையில் 100க்கு 50 லாபம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருவாங்கூரில் 12 ஸ்டோர்கள் இருக்கின்றன அவைகளில் திருவனந்தபுரம் கூட்டுறவு ஸ்டோர் என்ற சங்கம் 1929-30ல் ரூ. 90,000கரு வியாபாரம் செய்திருக்கிறது. ஹைதராபாத்தில் பல ஸ்டோர்கள் இருக்கின்றன. பெரும்பாலானவை தலைநகரிலேயே இருக்கின்றன. கூர்க்கில் இரண்டு ஸ்டோர்கள் இருக்கின்றன. காஷ்மீரில் விறகு ஸ்டோர் ஒன்று நன்றாக நடக்கின்றது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 9 ஸ்டோர்கள் நன்றாய் நடக்கின்றன. 1929-30ல் பர்மாவில் 3 ஸ்டோர்கள் இருந்தன. பீகார், ஒரிசாவில் உள்ள ஸ்டோர்கள் தொழிலாளர்களால் நடத்தப்படுகின்றன. அவற்றினுக்கு சர்க்கார் பொருளுதவி செய்து வருகின்றனர். பரோடாவில் 21 கிராமங்களில் ஸ்டோர்கள் நடக்கின்றன இவற்றில் 8 கிராமங்களில் நடக்கும் ஸ்டோர்கள் திருப்திகரமானவை. ஐக்கிய மாகாணத்தில் கூட்டுறவு ஸ்டோர்கள் அவ்வளவு நன்றாக நடக்கவில்லை. ஆக்ரா, சாண்டிலா என்ற இடங்களிலுள்ள ஸ்டோர்கள் நஷ்டமடைந்திருக்கின்றன. அசாமிலும் ஸ்டோர்கள் திருப்திகரமா[illegible]க்கவில்லை. ஷில்லாங்கிலுள்ள மூன்று ஸ்[illegible]தான் ஓர் மாதிரியாக நடந்துவருகின்றன. மத்திய மாகாணத்திலும், பீராரிலும் கூட்டுறவு ஸ்டோர்கள் 1918ஆ முதல் நடந்து வருகின்றன. இந்த ஸ்டோர்கள் தோல்வி அடைந்ததின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றதேயன்றி நன்றாக நடப்பவை குறைவாகவே இருக்கிறது. மாகாணக் கூட்டுறவுக் கமிட்டியார் வெளியிட்டுள்ள அறிக்கையில் 31 ஸ்டோர்களில் 6 ஸ்டோர்கள் நன்றாய் நடப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். பாஞ்சாலத்தில் மலைப்பிரதேசங்களில் வசிப்போர்க்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்டோர்கள் நன்றாய் நடைபெறுகின்றன. இங்கு ஒழுங்காக நடைபெறுவதற்குக் காரணம் நல்ல கண்காணிப்பு இருப்பதேயாகும்.

மாணவர்களுக்கென ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்டோர்கள் நன்றாய் நடக்கின்றன. இவற்றின் வெற்றிக்கு உபாத்தியாயர்களின் மேம்பார்வை என்பது வெளிப்படை. 1929-30ல் சென்னைமாகாணத்தில் 68. ஸ்டோர்கள் இருந்தன. மாணவர்கள் ஸ்டோர்கள் விருத்தியடையும் என்று யாவரும் நம்புவதுடன் அவைகள் வளர்ச்சிபெறவேண்டுமென்றும் விரும்புகின்றனர். ஏனெனில் இந்த ஸ்டோர்களில் பயிற்சிபெற்ற மாணவர்கள் எதிர்காலத்தில்

# சென்னை செல்வ நிலை

## சர்க்கார் கண்ட உண்மை

சென்ற சிலமாதங்களாக இம்மாகாணத்தின் பல பாகங்களிலும் விவசாயிகள் நில வரியைக் குறைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்துவந்தது சகலரும் அறிந்ததே. இது சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லாவின் உண்மையான நிலையை அறியும் பொருட்டு சர்க்கார் சுற்றறிக்கை விட்டிருந்தனர். சர்க்காருக்கும் ஜில்லா கலெக்டர்களுக்கும் மும்மரமான கடிதப் போக்குவரத்துகள் நடந்தன. கலெக்டர்கள் அனுப்பி வைத்துள்ள யாதாஸ்தைக்கொண்டு ரிவின்யூ போர்டார் ஜனவரி௴ 3-உ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்கள். அவ்வறிக்கையில் இம்மாகாணத்தின் பொருளாதார நிலை இருக்கும் நிலையை ஓர்அளவாவது சர்க்கார் உணர்ந்திருக்கிறார்களெனத் தெரிகிறது.

விவ[illegible]ருள்களின் விலை முன் இருந்தது போல் இன்[illegible]மிக பிற்போக்கான நிலையில் இருக்கிறது. நிலமோ விலையில் மலிந்து விட்டது. அதன் மலிவும் அதிகமெனலாம், பூஸ்திதியுடையோர் கூட்டுறவுச் சங்கங்களில் நிலத்தின் பேரில் ஈடாக பணம் வாங்குவதென்பது கஷ்டமாக இருக்கிறது. நிலச்சுவான்தார்கள் கூட்டுறவுச் சங்கங்களில் நிலத்தின்பேரில் பெற்ற கடன் பெருகிக் கொண்டே வருகிறது. இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்ய இயலாத நிலையில் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அதனால் வெளியில் கூட்டுறவுசங்கங்களின் பணம் முடங்கிக்கிடக்கிறது.

மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் இன்சால்வெண்ட் பெட்டிஷன்கள் சென்ற மூன்று நான்கு வருடங்களாக வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. இன்ஸால்வெண்ட் பெட்டிஷன்கள் என்றும் ஓர் அளவில் இல்லையானாலும் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து வரும் பெட்டிஷன்களையும் ஜனத்தொகையையும் கணக்கிட்டுப் பார்த்தால் அதிகமென்றே சொல்லவேண்டும்.

### சர்க்கார் திருப்தி.

நிலவரி பாக்கி வசூலுக்கென ஸ்தாவர ஜங்கமச் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது அவ்வளவு அதிகமாக இல்லை. நிலவரி வசூல் பாக்கியைக் கணக்கிட்டுப் பார்த்தால், அந்த அளவிற்கு நிலங்கள் விற்கப்பட்டிருக்கவேண்டுமோ அந்த அளவிற்கு விற்கப்படவில்லை. இதுவே, பொதுவாக இம்மாகாணம் பூராவும் எடுத்துக்கொண்டாலும், தனியாக ஜில்லா வாரியாக எடுத்துக்கொண்டாலும், இன்றுள்ள பொருளாதார நிலையாகும்.

( 15-ம் பக்கத் தொடர்ச்சி )

கூட்டுறவு இயக்க முன்னேற்றத்திற்குக் கற்றாண்களாக விளங்குவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. பரோடா, பாஞ்சாலம், பம்பாய், மத்திய மாகாணம், பீகார், மைசூர், கூர்க் ஆகிய இடங்களில் மாணவர் ஸ்டோர்கள் வெகு நன்றாக நடப்பதாகவும், இவை கல்வி இலாக்காவால் ஆதரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிசாமான் வாங்குவோர் சங்கத்தின் வளர்ச்சியைப் பொருத்திருக்கிறது. அப்படி இருந்தும் சாமான் வாங்கும் சங்கத்தின் அவசியத்தை இந்நாட்டினுள்ளோர் நன்குணரவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. இங்கிலாந்தில் இச்சங்கங்களின் வெற்றிக்குக் காரணம் தொழிலாளருக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்படுவதேயாகும். ஆனால் இந்தியாவிலுள்ள கைத்தொழிலாளர்களோ மிக ஏழ்மைத்தனத்தில் மூழ்கி இருக்கின்றனர். திருவெல்லிக்கேணி ஸ்டோர் இன்று நன்றாக நடப்பதற்குக் காரணம் அந்த ஸ்டோரில் வக்கீல்கள் உபாத்தியாயர்கள், டாக்டர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் போன்ற கொழுத்த வருமானமுள்ளவர்கள் அங்கத்தினர்களாக இருப்பதேயாகும். நாடெங்கும் கூட்டுறவு ஸ்டோர்கள் விருத்தியடைய வேண்டுமானால் தொழிலாளர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும். மேலும் சில்லரை வியாபாரிகள் அனுஷ்டிக்கும் தந்திரங்களை கூட்டுறவு ஸ்டோர்கள் கையாள்வது சாத்தியமில்லையாகையால் சாமான் வாங்குவோர் ஸ்டோர்களை ஆதரிக்கிறார்களில்லை. கடைகளில் சாமான்வாங்கினால் விலை சரசமென எண்ணி ஸ்டோர்களில் சிலர் வாங்குகிறார்களில்லை. எனவே ஸ்டோர்களின் வளர்ச்சி அங்கத்தினர்களுக்கு கூட்டுறவு இயக்கத்திலுள்ள நம்பிக்கையையும், சங்கத்தினிடம் கொண்டுள்ள பற்றுதலையும் பொறுத்திருக்கிறது. இறுதியாகக் கூறுமிடத்து ஸ்டோர்களின், நிர்வாகஸ்தர்கள் தன்னலமற்றவர்களாகவும் தியாக புத்தியுள்ளவர்களாகவும் இருந்தால் கூட்டுறவு ஸ்டோர்கள் வெற்றிகரமாக நடக்குமென்பது உறுதி.

(தொடரும்) N. S. G.



# ஐக்கிய டென்மார்க்கு

எப். ஸி. ஹோவ், அமெரிக்கா.

டென்மார்க்கு ஓர் சிறு தேசம். அதன் மொத்த விஸ்தீரணம் 15,586 சதுர மைல். அதில் புதிதாய்ச் சேர்ந்த பிரதேசங்களைச் சேர்த்து 17,118 சதுரமைல் ஆகும். மொத்த ஜனத்தொகை சுமார் 32,20,000 ஆகின்றது. இச்சிறு தேசமானது மற்ற நாடுகளைவிட முன்னேறியிருப்பதற்குக் காரணம் யாது? இயற்கையாகவே டேனியர்களுக்குள்ள தன்மையா? சீதோஷ்ண அமைப்பா? அல்லது மற்றநாட்டு அரசியல் ஞானிகளை விட தேர்ச்சி பெற்ற சில பெரியார்களது முயற்சியா? இக்காரணங்களொன்றினாலும் டென்மார்க்கு முன்னேறவில்லை. ஜனங்களே தங்கள் தேசத்தை இவ்விதம் விருத்தி செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சுய முயற்சியினால் அரசியல் முறையையும், வியாபாரத்தையும், நாணயத்தையும், தனிக் கல்வியையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டின் விவசாயத் தொழிலாளர்களை நிலம் படைத்த விவசாயிகளாக உயர்த்தி இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்தை ஒரு கலையாகவும், குதிரை, மாடு, பன்றி, முதலியன வளர்ப்பதை ஓர் சாஸ்திரமாகவும் ஆக்கியிருக்கிறார்கள்.

டென்மார்க் பல துறைகளிலும் முன்னேறக் காரணம் கூட்டுறவு இயக்கத்தை டேனியர்கள் கிரியாம்சத்தில் கைக்கொண்டதேயாகும். டென்மார்க் தேசத்தில் எங்கு சென்றாலும் ஐக்கிய சங்கம் உண்டு. மற்ற தேசங்களில் தனி முதலாளிகள் பணம் போட்டு நடத்தும் காரியங்கள் எல்லாவற்றையும் கூடியமட்டும் டேனியர்கள் தமக்குள் இருக்கும் ஒற்றுமையால் கூட்டுறவு முறையில் தம் காரியத்தைத் தாமே செய்கின்றார்கள் அதனால் லாபம் ஒருவன் பையில் போய் குவியாமல் பொது ஜனங்கள் யாவருக்கும் கிடைக்கிறது. கசாப்புக் கடை முதல் சகல வியாபாரங்களும் ஐக்கிய முறையில் நடப்பனவே யன்றி, தனிக்கோடீசுவரர்களுடைய முதலைக்கொண்டு நடப்பனவல்ல. நாடெங்கும் வெண்ணை பாலாடை கட்டி செய்யப்படுகின்றன. முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. டேனியர்கள் வெளியூர்களிலிருந்து ஆடுமாடுகளுக்குத் தீனி வாங்கிவருகிறார்கள். விவசாயத்திற்குரிய இயந்திரங்களும் வீட்டுக் காலக்ஷேபத்திற் கவசியமான சாமான்களும் வாங்கி வருகிறார்கள். தாமே பாங்கிகள் வைத்து பணம் போட்டு பற்று வரவுக் கணக்கேற்படுத்திக் கொள்ளுகிறார்கள். தம் வீட்டுக்கும் ஆடுமாடுகளுக்கும் சேதம் வராமல் பாதுகாப்பதோடு எதிர்பாராத விதமாய் சேதம் வருமானால் நஷ்ட ஈடு பெறவும் தாமே ஐக்கிய முயற்சியால் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். மொத்தமாக மலிவான விலைக்கு வாங்கிச் சில்லரை விலைக்குத் தாமே எடுத்துக் கொள்ளுகிறார்கள். தேசமெங்கும் பண்டசாலைகள் ஐக்கிய முறையில் நடைபெறுகின்றன. சுமார் இரண்டாயிரம் சில்லரை ஐக்கிய பண்டசாலைகள் தேசத்திலுள்ளன. இப்பண்டசாலைகளுக்குச் சொந்தமாக தொழிற்சாலைகள், கிடங்குகள், கோபென்ஹேகென் முதலிய நகரங்களில் தத்தம் சொந்தக்கடைகள் (ஏஜன்சிகள்,) இத்தனையும் இருக்கின்றன. முதல்தரமான குதிரைகளையும், ஆடுமாடுகளையும் கைவசத்தில் வைத்துக்கொண்டு பொலிவு காளைகள் குதிரைகள் முதலியனவற்றால் உத்தம ஜாதிப்பிராணிகளைப் பிறப்பித்து வளர்க்கின்றனர். டேனிய விவசாயிகள் இருநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த பழைய ஸ்வாதீனமான நிலைமையை அடைந்திருக்கின்றனர். ஐக்கிய முயற்சியால் டேனிய விவசாயி ஒவ்வொருவனும் பொருள் படைத்தவனாக இருக்கிறான். ஐம்பது வருடங்களுக்கு முன் ஐக்கிய அமெரிக்கா நாட்டினர் எவ்விதம் பாடுபட்டு உழைத்தார்

களோ அதுபோல் டேனியர்களும் உழைத்தார்கள். டென்மார்க்கைப் போலவே அமெரிக்காவிலும் இடை நடுவிலுள்ள தரகர்கள் லாபம் அடித்து வந்தனர். அதனால் உண்மையில் சரக்கை விளைவித்தவனுக்கும் உண்மையில் வாங்கி உபயோகிக்கிறவனுக்கும் நஷ்டமேற்படுவது சகஜம். விவசாயியானவன் இந்தத் தரகர்கள் மூலமாய்த்தான் வியாபாரம் செய்ய முடியுமாகையால் அவன் வேறு வழியின்றி தரகனுக்கு அடிமையாக இருக்க நேரிட்டது.

அமெரிக்க விவசாயிக்குத் தன் விளைபொருள்கள் எங்கு யாருடைய உபயோகத்திற்குப் போகின்றனவென்பது தெரியவாது தனக்கு விரோதமாய் உழைக்கும் தரகனிடத்தில் அநியாயமாய்க் குறைந்த விகிதத்திற்கு விற்றுவருவது வழக்கம். கோதுமையோ, ஆடுமாடுகளோ, சோளமோ, தினையோ, இவ்வாறான எந்த விளைபொருளானாலும் சரி, தரகனிடத்தில் அற்பவிலைக்குத் தான் போடவேண்டும். வாத்துகளையும், கோழி முட்டைகளையும், பழங்களையும் இவ்வாறு தரகனிடத்தில் தான் விற்கமுடியும். அவர்கள் அற்ப விலைக்குத் தான் வாங்குவார்கள். இந்தத் தரகர்களில் கீழ்த் தரகன், நடுத்தரகன் மேல்த்தரகன் எனப் பலருண்டு. ரயில் பாதைகளும், துறைமுகங்களும், பாங்கிகளும் இவர்கள் கைக்குள்ளேயே இருக்கின்றன. விசேஷமாய் சிகாகோவிலும், மேற்கு பிராந்தியங்களிலும் ஏராளமான ஆடு, மாடு, பன்றிகளைக் கொன்று மாம்சங்களைக் குளிர்ந்த இடத்தில் வைத்து அழுகிப்போகாமல் பாதுகாத்து, அவற்றை பெட்டிகளிலும் டப்பாக்களிலும் அடக்கமாகக் காற்றுப்போகாமல் மூடி முத்திரையிட்டு ஏற்றுமதி செய்யவும், துறைமுகம் வரையில் கொண்டு போய்ச் சேர்க்கவும் வசதிகளையுடையவர்கள் தரகர்களே. பாங்கிகளும் இதே முறையில் தான் நடக்கின்றன. தரகர்கள் கொடுக்கும் குறைந்த விலையைத் தான் விவசாயிகள் பெற்றுக் கொள்ளவேண்டும். தரகர்கள் சொல்லும் அதிக விலையைக் கொடுத்தால் தான் சரக்கு உபயோகத்திற்கு அகப்படும்.

1880-௵ வரை இதே வழக்கந்தான் டென்மார்க்கில் இருந்தது. ஆனால் தேசத்திற்கு தக்கபடி குறைந்த அளவில் இருந்தது. இதன் பயனாக விவசாயம் நஷ்டப்பட்டது. டேனிய விவசாயிகள் கஷ்ட திசையை அடைந்தனர். தம் நாட்டுத்தரகர்களுடைய கொள்ளையோடு மட்டுமல்லாமல் அமெரிக்காவிலிருந்து ஏராளமான விளைபொருள்கள் வந்தமையாலும் ஜெர்மனியர்கள் விதித்த தடுப்புச் சட்டத்தாலும் டேனியர்கள் விவசாயத்தில் குன்றிப் போயினர். நாற்பது வருஷ காலத்திற்குள் ஐக்கிய முயற்சியால் இந்நிலைமை யாவும் மாறிவிட்டது. இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் விவசாயிகள் நான்காயிரம் ஐக்கிய சங்கங்களில் சேர்ந்துகொண்டு ஒவ்வொரு வகையான தொழிலிலும் ஈடுபட்டு உழைக்கின்றனர். இவைகளின் மூலமாக விவசாயிக்கு அவசியமான எதுவும் கிடைக்கிறது

ஐக்கிய சங்கங்களால் உற்பத்திசெய்யப்படும் பொருட்கள் மட்டும் எத்தனை? எத்தனை தினுசான ஐக்கிய சங்கங்கள் டென்மார்க்கில் ஏற்பட்டுள்ளன? என்பவை கீழே குறித்திருக்கும் கணக்கினால் விளங்கும். சாமான்களை உபயோகிப்போர்களுடைய சங்கங்களான ராக்டேல் சங்கங்கள் வெகு பிரபலமாய் ஏற்பட்டிருந்தாலும் அவை அக்கணக்கில் சேரவில்லை. ஐக்கிய முறையில் நடைபெறும் பால், தயிர், வெண்ணை செய்யுமிடம் 1203. இதனில் 1915-௵ புரண்ட பணம் 10,50,00,000 ரூபாய்.

1915-௵ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வெண்ணை, மாமிசம், முட்டை முதலியவற்றின் பொருமானமாவது :—

| | |
|---|---|
| வெண்ணை | ரூ. 8,00,50,000 |
| ஆடு, மாடு, பன்றி, மாமிசம். | ரூ. 7,22,00,000 |
| முட்டைகள். | ரூ. 22,00,000 |

இவ்வாறு சரக்குகளைச் செய்வதற்கும் விற்பதற்கும் ஐக்கிய சங்கங்கள் இருப்பன போல், சரக்குகளை வாங்கவும் பதினைந்து



சங்கங்கள் உள்ளன. அவற்றைச் சேர்ந்த அங்கத்தினர் 70,000 பேர்கள். 690 மத்திய சங்கங்களும், உத்தம ஜாதி குதிரை, ஆடு, மாடுகளை விருத்திசெய்வதற்கு 1700 சங்கங்களும் உள்ளன. தேசத்திலுள்ள ஐக்கிய சங்கங்கள் எல்லாவற்றிலும் புரண்ட மொத்த பணம் எண்பத்து ஏழரைகோடி ரூபாயாகும்.

1916-௵ பெரிய ஐக்கிய சங்கங்களில் இருந்த அங்கத்தினர்களின் சுமாரான சங்கியை பின்வருமாறு :—

| சங்க விபரம். | அங்கத்தினர்கள். |
|---|---|
| சரக்குகளை சில்லரையில் விற்கும் ஐக்கிய சங்கங்களில். | 2,44,000 |
| பால், வெண்ணை முதலியன உற்பத்தி செய்யும் ஐக்கிய சங்கங்களில். | 1,90,000 |
| பன்றி மாமிசம் தயாரிக்கும் ஐக்கிய சங்கங்களில். | 1,35,000 |
| முட்டைகள் ஏற்றுமதி செய்யும் ஐக்கிய சங்கங்களில். | 45,000 |
| உரம் வாங்கும் ஐக்கிய சங்கங்களில். | 70,000 |
| ஜட்லந்தில் மட்டும், ஆடுமாடுகளுக்குத் தீனி வாங்கி விற்கும் ஐக்கிய சங்கங்களில். | 44,000 |
| வளர்ப்பு சங்கங்கள். | 23,000 |
| மேல் பார்வை சங்கங்கள். | 16,000 |

பயிரிட்டு விளைந்த பொருள்களை விற்பதற்கும் பயிரிடவேண்டிய அளவைத் திட்டம் போட்டு நிச்சயிப்பதற்கும் 1915-ல் 2,85,00,000 டாலர் முதல் போட்டுத் தொடங்கிய ஒரு வியாபாரத்தில் 2,45,000 பேர்கள் அங்கத்தினராகச்சேர்ந்தனர். டேனியர்களுடைய விவசாயத்தில் நமக்கு ஆச்சரியகரமாயிருப்பது இந்த ஐக்கிய முறையாகும். விவசாயமும் அதன் சம்பந்தமான ஒவ்வொரு தொழிலும் விசேஷ அபிவிருத்தி அடைந்திருப்பதையும், டென்மார்க்கின் ஒவ்வொரு கிராமத்திலும் அந்த இயக்கம் பரவி இருப்பதையும் காணலாம். இவ்விதம் பல கிராமங்களில் பலவேறு ஐக்கிய சங்கங்களையெல்லாம் தன் ஆதீனத்திற்குட்பட நடத்திவரும் பெரிதான மூலச்சங்கம் ஒன்று உளது. இம்மாதிரி பெரும் போக்கான ஐக்கிய முயற்சிகள் டென்மார்க்கில் நடைபெறுகின்றன. இந்நாட்டில் நடைபெறும் ஐக்கிய இயக்கம் விவசாய விருத்திக்கும், ஏழைக்குடியானவர்களின் முன்னேற்றத்திற்குமென உதாரகுணமுள்ளபிரபுக்களாலோ அல்லது சொத்துக்காரர்களாலோ ஆரம்பிக்கப்பட்டதல்ல. கிராமங்களில் குடியானவர்களின் சொந்த பிரயத்தனத்தாலேயே ஐக்கிய இயக்கம் நாளுக்குநாள் பலப்பட்டு வளரலாயிற்று. ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டுமென்ற எண்ணமும் வெகு நூற்றாண்டுகளாக அவர்களிடத்து இருந்தபடியால் அந்த இயக்கம் வேறான்றி நிலைத்து நிற்கின்றது.

## வெண்ணைத் தொழிற்சாலை.

இங்கிலாந்தைப்போலவே அற்ப ஆரம்பத்திலிருந்து தான் ஓர் பேரியக்கமாக கூட்டுறவு முறை டென்மார்க்கிலும் பரவியுள்ளது. விவசாயத்திற்கே இந்த ஐக்கிய முறை இன்றியமையாததாயிற்று. 2,50,000 குடியானவர்களின் செல்வ விருத்திக்கும், சமுதாய ஒற்றுமைக்கும், அரசியல் மேன்மைக்கும், இந்த ஐக்கிய இயக்கமே மூலாதாரமாயிருக்கிறது. குடியானவன் கொடுக்கும் விலையும், அவன் பெறும் வருமானமும், அவன் வசிக்கும் தோரணையும், அவனுடைய அரசியல் காரியமும், ஏனைய குடியானவர்களோடு ஒற்றுமையுணர்வுடையவனாய் நானாவித ஐக்கிய முறை பற்றிய பிரவர்த்திகளில் கலந்து வாழ்வதைப் பொறுத்ததாகவேயுள்ளது.

இந்த இயக்கம் முதலில் வெண்ணைக்கடையில் ஆரம்பித்தது. 1881-ம் வருஷத்திற்கு முன் டேனிய விவசாயியானவன் அமெரிக்க விவசாயியைப்போலவே தனியேதான் வியாபாரம் செய்து வந்தான். ஒவ்வொரு குடியானவனும் தான் சேர்க்கும் வெண்ணையை தன்னாலியன்றமட்டும் நல்ல விலைக்குக் கொடுப்பான். நாட்டுப்புறத்தில் வைக்கோல் முதலிய தீனி வழக்கமாய் கொண்டு வரும்படி ஏற்பாடு செய்து கொள்ளுவான். இல்லாவிட்டால் அவன் அருகேயுள்ள பட்டணத்தில் விற்றுவிடுவான். பிறகு பட்டினத்திலிருந்து தீனி

வாங்கிவரவேண்டி நேர்ந்தால் ஏராளமான விலை கொடுத்து வாங்குவான். அதற்குத்தக்க வரும்படி கிடைப்பது நிச்சயமல்ல. ஆயிரக்கணக்கான சிறு குடியானவர்களுக்கு இது மெத்த அசௌகரியமாயிருந்தது.

1881-ம் வருஷத்தில் சிலவிவசாயிகள் ஓர் கூட்டம் கூடித் தாங்களாக ஐக்கிய முறையில் ஓர் வெண்ணெய்த் தொழிற்சாலையை ஏற்படுத்தத் தீர்மானித்தனர். ஓர் சுலபமான ஏற்பாட்டின் மேல் நடத்தத்தொடங்கினர். அது முதல் அப்படியே நடந்து வருகிறது. தங்கள் வீட்டுச் செலவுக்குப் போக மிகுந்த பாலை ஒவ்வொருவரும் இந்த வெண்ணெய்த் தொழிற்சாலையில் கொடுத்துவிடவேண்டியது. கடன் ஏதாவது வந்தால் பொதுப்பொறுப்புப்லாபம் ஏதாவது வந்தால் அதை எல்லோருமாக அவரவர் கொடுத்திருக்கும் பாலுக்குத் தக்கபடி பிரித்துக்கொள்ளவேண்டியது.

### பாற்சாலை லாபகரமானது.

ஐக்கிய முறையில் ஏற்படுத்திய பாற்சாலை உடனே லாபகரமாயிற்று. விவசாயியானவன் தனியே செய்த வெண்ணெயைவிட ஐக்கியப் பாற்சாலையில் செய்த வெண்ணெய் சிறந்ததாயிருந்தது. அதனால் அவர்கள் தம்மால் அப்படிப்பட்ட தினுசு செய்தல் கூடுமென்று தெரியவந்தது. அதன் பயனாகக் காலக்கிரமத்தில் அதிக விலை கூறவும் சாத்தியமாயிற்று. இச்சிறு பிரயத்தனத்தினின்று ஐக்கிய இயக்கமானது சீக்கிரம் மற்ற ஜில்லாக்களிலும் பரவியது. 1882-௵ முதல் 1888-௵த்திற்குள் தேசமுழுவதும் ஐக்கியப்பாற்சாலைகள் ஏற்பட்டன. 1914-ம் வருஷத்திற்குள் பாற்சாலைகள் மொத்தம் 1503 ஆயின. அவற்றுள் 1168 ஐக்கிய முறையில் நடப்பனவாம். இவ்வைக்கியப் பாற்சாலைகளில் அரைவாசிக்கு மேல் 1890-ம் வருஷத்திற்கு முன்னமேயே ஏற்பட்டவைகள்.

ஆடுமாடுகளில் உத்தமஜாதிகளைப் பிறப்பித்து வளர்க்கவும், அதன் மூலமாய்ப் புஷ்டிகரமான பாலும் வெண்ணெயும் அடையவும் சாஸ்திரீய முறை ஒன்று உளது என விவசாயிகள் இவ்வைக்கியப் பாற்சாலைகளின் மூலமாய்த் தெரிந்துகொண்டனர். அவர்கள் யாவரும் நல்ல பாலையே பாற்சாலையில் கொடுக்க முயன்றனர். ஓர் ஜில்லாவிலுள்ள விவசாயிகளெல்லோரும் ஓர் ஐக்கியப் பாற்சாலையில் அங்கத்தினராகுங்கால் ஓர் வண்டியை அனுப்பி எல்லா வீடுகளிலிருந்தும் பாலை வாங்கிவரச் செய்தல் சாத்தியமாயிற்று. இதனால் ஒவ்வொருவரும் அனாவசியமாக வண்டிச் சத்தம் கொடுக்கவேண்டியதில்லை. ஆடை எடுத்தபிறகு சாரமற்ற பாலை தங்கள் பன்றிக்கு உணவாக வைத்தனர். இதனால் பன்றிகள் கொழுக்கலாயின; பன்றி மாமிசத்திற்கு கிராக்கி ஏற்படலாயிற்று. உடனே ஐக்கிய முறையில் கசாப்புகடைகள் ஏற்பட்டன. எடுக்கப்படும் வெண்ணெயின் குணமும் அளவும் அதிகரிக்குமாறு அநேக உபாயங்களால் அபிவிருத்தி செய்யப்பட்டது. டென்மார்க்கில் பிரசித்தியாயிருந்த "எஸ்டேட்" வெண்ணெயைவிட ஐக்கியப் பாற்சாலை வெண்ணெய் சிலாக்கியமானது எனப் பெயரெடுத்தது.

ஓர் சிறு குடியானவனுக்கு இரண்டொரு மாடுகளே இருக்குமானால் தன்னிடமுள்ள பாலை விற்பனை செய்து அதன் பயன் பெறுவதும் சாத்தியமாயிற்று. இதனால் அற்ப சொற்பமான நிலம் உடையவர்களும் மேலோங்குவதற்கு இடமேற்பட்டது. இப்போது விவசாயிகளில் 100-க்கு 90 பேர்கள் ஐக்கியப்பாற்சாலைகளில் அங்கத்தினராயிருக்கின்றனர். சுமார் 70 ஏக்ரா நிலமுடைய விவசாயிகள் 8 பசுக்கள் வளர்த்து வந்தனர். எட்டிலிருந்து பதினொன்றாக அபிவிருத்தியாயிற்று. அதன் பிரகாரமே ஒவ்வொரு பசுவின் கறவையும் பாலிலுள்ள எண்ணெய்ப் பசையும் அதிகரித்தன. 1881-ம் வருஷத்தில் டென்மார்க்கிலிருந்த பசுக்களின் சங்கியை 89,9000 ஆனால் 1914-க்குள் பசுக்களின் சங்கியை 13,10,000 மாக அதிகரித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட வெண்ணெய் 1881 முதல் 1885 வரை ஐந்து வருஷ சராசரி 15,630 டன். 1911—1915-ல் ஐந்து வருஷ சராசரி 99,420 டன்.



டென்மார்க்கில் அகப்படும் பாலில் முக்கால் வாசிக்கதிகம் ஐக்கியப் பாற்சாலைகளிலேயே கிடைக்கின்றன. பசுக்கள் மேயும்படியான நிலங்களில் 100க்கு 86 ஐக்கியப் பாற்சாலைகளைச் சேர்ந்தனவாம். தேசத்திலுள்ள பசுக்களின் மொத்த சங்கியையில் 100க்கு 83 இந்த ஐக்கிய பாற்சாலைகளைச் சேர்ந்தவைகள். தனித்திருக்கும் சொத்துக்காரர்கள் அநேகமாய்ச் சிறு தீவுகளில் ஏராளமான பூமியை உடையவர்களேயாவர். தனியே வைக்கப்படும் பாற்சாலை ஐக்கியப் பாற்சாலைக்கு எதிர்நிற்க முடியவில்லை. 1900 ௵ முதல் 1914௵ வரை தனிப்பாற்சாலைகள் 511 ஆக இருந்தவை 212 ஆக குறைந்து போயின. ஐக்கியப் பாற்சாலைகள் 1029லிருந்து 1167 ஆயின.

### விவசாயிக்கு லாபம்.

ஐக்கியப் பாற்சாலையினால் விவசாயிக்குச் செலவு மட்டு. லாபமும் சௌகரியங்களும் அதிகம். வண்டிச் சத்த விகிதங்களின் குறைவும், சாஸ்திர முறைப்படி டப்பாக்களில் அடைத்துப் பொட்டணங்களாகச் செய்யும் நல்ல வெண்ணெயும் சரியான அளவும், ஒழுங்காய் அனுப்பிவரும்படியான வசதிகளும், ஐக்கியமுறையில் நடக்கும் மொத்த ஏற்பாட்டினால் தான் முடியும். வெண்ணெய் கெடாமல் சுயமாகவும் சுத்தமாகவும் நீடித்து இருக்க வேண்டுமானால், டப்பாக்களில் நிரப்பி இறுக்கமாய் அடைப்பது அதி முக்கியம். ஐக்கியப் பாற்சாலைகள் இப்படிப் பல சேர்ந்து ஓர் பெரு முயற்சியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை விட்டால் குடியானவன் ஒருவன் தன் பசுக்கள் இரண்டொன்றை வைத்துக்கொண்டு, அவை கொடுக்கும் பாலினின்று வெண்ணெய் எடுத்து, அதைமட்டும் ஏற்றுமதி செய்தல் கூடுமோ? முடியாது. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யாத பக்ஷத்தில் நல்ல விலை கிடைக்காது. ஆதலால் டென்மார்க்கிலுள்ள சாமானியக் குடியானவனும் தன் சரக்கைத் தூரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யும்படியான சௌகரியத்தை ஐக்கிய முறையால் அடைகிறான். குடியானவன் ஐக்கியப் பாற்சாலையில் சேர்ந்துக் கொள்வதால் வேறு சில நன்மைகளும் அடைகிறான். பாற்சாலையில் பால் ஊற்றுகிற குடியானவர்களுக்கு வாரந்தோறும் கணக்குத் தீர்க்கப்படுகிறது. அதனால் குடியானவனுக்குப் பணம் கடன் வாங்கமுதல்போடவேண்டியதில்லை. அதனால் குடியானவன் தன் தொழிலை விட்டு வர்த்தகம் செய்யவேண்டிய அவசியமுமில்லை. மேலும் அவனுக்கு விற்பனை செய்வதால் பெரும் லாபம் கிடைக்கிறது. தரகர்களுக்குப் போகும் லாபம் யாவற்றையும் தானே அடைகிறான்.

### பாற்சாலைகள் எப்படி ஏற்பாடு செய்யப்படுகின்றன.

வழக்கமாய் சில குடியானவர்கள்ஒரிடத்திலிருப்பவர்களாக சேர்ந்து சேவிங்ஸ் பாங்கியிலிருந்து அவசியமான தொகையைக் கடன்கேட்டு வாங்கலாம். இவ்வெல்லாப்பாற்சாலையிலும் எத்தனைபேர்கள் வேண்டுமானாலும் ஏராளமாய்ச்சேரலாம். கட்டிடத்திற்காகக்கடன் வாங்கின தொகை சிறுகச்சிறுக கொடுபடலாம். அவசியமான கையிருப்பு முதலுக்கு அங்கத்தினர் ஒவ்வொருவரும் பசு ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என்ற ஒரு கணக்கின்படி பொறுப்புத் தொகையாகக் கொடுக்கின்றனர். இவ்வாறு நடத்திப் பதினைந்து வருஷத்திற்குள் பாங்கியில் ஏற்கனவே வாங்கி இருந்த கடனைத்தீர்த்துவிட்டு அதேவட்டிக்கு புதிய கடன் வாங்கி பாற்சாலை நடத்துகின்றனர். பழைய அங்கத்தினர்களிடம் இந்தத் தொகை ஒப்புவிக்கப் படுகின்றது. பிறகு பழைய அங்கத்தினரும் புது அங்கத்தினரும் சேர்ந்து முன்போலவே ஒத்துழைத்துக் கடனைத்தீர்க்கின்றனர். இவ்வாறு பழைய கடனை தீர்த்து புதுக்கடன் வாங்கித் தொழிலை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்கு சேவிங்ஸ் பாங்கி மெத்த உதவியாயிருக்கிறது. ஒன்று அல்லது இரண்டு வாரத்திற்கொருதரம் கணக்குத்தீர்க்கப்படுகின்றது. வெண்ணெய் முதலியன செய்வதற்காகும் செலவைக் கழித்தபிறகு மீதியிலிருந்து அங்கத்தினர்களிடம் வாங்கும் பாலுக்கு முழுகிரயம் கொடுக்கப்படுகிறது. குடியானவர்கள் கடைந்த பாலும் கடைந்த மோரும் விலைக்கு வாங்கிக்கொள்ளுகின்றனர். ஆகவே, அங்கத்தினர்களுக்கு கிடைக்கவேண்டிய பணம் அவ்வப்போது கிடைக்கின்றது.

செலவுக்காகக் கழிக்கப்படும் தொகையில் நஷ்டம் வந்தாலும் ஈடு செய்யக்கூடிய தொகையும் சேருகின்றபடியால், வருஷந்தோறும் அது மிச்சந்தான். அது அங்கத்தினர்க்கு அவரவர்கள் கொடுத்த பாலுக்கு தக்கபடி ஈவித்துக் கொடுக்கப்படுகின்றது. 1909ல் மூன்றுகோடி நாற்பது லக்ஷம் க்ரோனர் மிஞ்சியது.

ஐக்கியப் பாற்சாலைகள் ஜன நாயக முறையில் நடைபெறுகின்றன. அநேகம் பாற்சாலைகளில், அங்கத்தினர் அவரவர்களுக்கு எத்தனை பசுக்கள் இருப்பினும் ஒவ்வொருவருக்கும் ஒரு வோட்டு உண்டு. சில வெண்ணைச் சாலைகளில் மட்டும் பணக்காரர் குடியானவர்களுக்கு அதிகம் செல்வாக்கு உள்ளது. அவை நூற்றுக்கு ஆறு விகிதமாம் குடியானவர்கள் தமக்குள்ளிருந்தே மேற்பார்த்து நடத்தும்படியான அங்கத்தினர் சிலரைத்தேர்ந்தெடுப்பார்கள். தொழில் தெரிந்த ஒருவரை மானேஜராகவும் நியமிப்பார்கள்

வெவ்வேறு இடங்களிலுள்ள ஐக்கிய சங்கங்கள் பல ஒன்றாக இணைக்கப்பட்ட அனேக மத்திய மகா சங்கங்கள் இருக்கின்றன. இவைகள் பாற்சாலைகளை எவ்விதம் நடத்துவது, வரவு செலவுகளை எப்படி மேற்பார்ப்பது முதலிய சகல விவரங்களையும் பிரசாரப்படுத்திப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பதுண்டு இந்த நோக்கத்தின்பொருட்டு வெண்ணை செய்யும் 21 சங்கங்கள் ஒன்று சேர்ந்திருந்தன டேனிய வெண்ணைச் சாலைகளுக்காக மொத்த வியாபாரம் செய்யும் சங்கமொன்று 1901-௵த்தில் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலமாய் பாற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரங்களைக் கூடியமட்டும் குறைந்த விலைக்கு வாங்குதல் சாத்தியம.

பாற்சாலையின் ஏற்பாட்டில்ஒவ்வொரு அங்கத்தினரும் 10 அல்லது 15 வருஷம் ஒரு குறித்தகாலம்வரை தம் உபயோகத்திற்குக் கண்டு மிஞ்சும்பால் அவ்வளவையும் ஐக்கியப் பாற்சாலையில் கொணர்ந்து ஊற்ற வேண்டும். இந்தவிதி தவறுகிறவர்களுக்கு சுமந்த அபராதம் போடப்படும். பசுக்களை நேராய்ப் போஷிக்கும் விஷயமாகவும், சுத்தமாய்ப் பால்கறக்கும் விஷயமாகவும், கண்டிப்பான விதிகள் நியமிக்கப்பெற்றுள்ளன.

சர்க்கார் செய்வதொன்றுமட்டும் என்னவெனில் வெண்ணையின் தரம் ஒரேதினுசாயிருந்துவருகிறதா என்று பரிசோதித்தலேயாம். ஏற்றுமதி செய்யப்படும் வெண்ணையில் ஜலம் ஆறில் ஒருபங்குக்கும் குறைந்ததாகவே இருக்கவேண்டும். அதைக்கெடாமல் பாதுகாக்க உப்பைத்தவிர வேறு எதுவும் சேர்க்கக் கூடாது. அரசாங்கத்தின் ஆதரவில் அரசாங்கச்செலவிலே வருஷந்தோறும் வெண்ணைக் காட்சி நடைபெறுவதுண்டு. முதல்தரமான வெண்ணை கொண்டு வந்தவர்களுக்குப் பரிசு கொடுக்கப்படும்.

## வியாபார விருத்தி.

ஐக்கிய பாற்சாலையில் சிறு விவசாயிக்குப் பெருத்த லாபம் உள்ளது. மொத்த சாகுபடி செய்யப்படும் பூமியில், நூற்றுக் கெழுபது சிறு விவசாயிகள் தம் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படி எழுபதினாயிரம் வயல்கள் இச்சிறு விவசாயிகளுக்கு அனேகமாய்ச் சொந்தமாயுள்ளன. இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் ஐக்கிய பாற்சாலையில் சேர்ந்திருக்கின்றனர். 1842—௵த்திற்கு முந்தி 70 ஏக்ரா பூமிக்கு 8-பசுக்கள் சராசரி விகிதமாயிருந்தது. அதற்கு 380 காலன் பால் கிடைத்தது. அதாவது 110பவுண்டுவெண்ணை கிடைத்தது. எஸ்டேட் வெண்ணையைவிட ஒரு பவுண்டுக்கு ஐந்தரை குறைவாகவேவிலை பெற்றன. ஐக்கிய பாற்சாலைகள் வந்தபிறகு இதெல்லாம் மாறின. பசுக்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. பசுக்களின் ஜாதியும் முதல்தரமாயின. சராசரி 70 ஏக்ரா நிலத்திற்கு முன்னம் 8 பசுக்களாயிருந்ததுபோக 11 பசுக்களாயின. பால் 550 காலனும் 200 பவுண்டு வெண்ணையுமாக விருத்தி செய்யப்பட்டது. ஒருவயலுக்கு 880 பவுண்டு வெண்ணை கிடைத்தது. இப்போது 2200 பவுண்டு கிடைக்கிறது. ஒவ்வொரு பவுண்டு வெண்ணைக்கும் முன்போல் 5 அணா குறைந்த விலையின்றி முழு விலையும் கிடைக்கின்றது.

1881 ௵த்தில் டென்மார்க்கில் மொத்தம் பசுக்கள் 8.99,000. 1914-௵த்திற்குள் 13,10,000 ஆக அதிகரித்தன. ஒவ்வொரு



ப்பசுவின் பால் கறவையும், பாலிலுள்ள வெண்ணைப்பசையும் அதிகமாயிற்று. ஆனதால் நல்லவெண்ணை வேண்டியமட்டும் செய்தல் சாத்தியமாயிற்று. ஜனங்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு பெரும்பாலும் தேங்காய் எண்ணையை வைத்துக்கொண்டு பசு வெண்ணையை ஏற்றுமதி செய்கின்றனர்.

டென்மார்க்கின் வெண்ணை ஏற்றுமதி விபரமாவது :—

| | டன். |
|---|---|
| 1881—1885 | 15,630 |
| 1891—1895 | 48,070 |
| 1901—1905 | 76,044 |
| 1911—1915 | 99,420 |

### கசாப்புக்கடையும், மாமிச வியாபாரமும்.

கடைந்தபாலும் மோரும் வேண்டியமட்டும் பன்றிகளுக்கு உணவாகக் கிடைக்கவே கசாப்புத் தொழிலும் மாம்சச்சாலைகளும் ஐக்கிய முறையில் நடத்தத் தூண்டுதலேற்பட்டது. முதன் முதல் 1887-ம் வருஷத்தில் கசாப்புத்தொழில் ஐக்கிய முறையில் ஏற்பட்டது. அடுத்த சில வருஷங்களுக்குள் இன்னும் 11 ஏற்பாடு செய்யப்பட்டன. இப்போது அத்தேசத்தில் 46 கசாப்புக் களங்கள் உள்ளன. அவற்றின் மொத்த அங்கத்தினர் 1,41,500 வருஷம் தோறும் 21,69,000 பன்றிகளைக் கொல்கின்றனர். மொத்தம் 40 லக்ஷம் டாலர் முதல் போட்டிருக்கின்றனர். ஓர் கசாப்புக் களத்திற்கு சராசரி 86,000 டாலர் முதல் போடப்பட்டிருக்கிறது. 1882 வருஷத்தில் 23,400 பன்றி கொல்லப்பட்டது. இப்போது வருஷத்திற்கு 20,00,000 பன்றிகள் ஐக்கியக் கசாப்புக்களத்தில் கொல்லப்படுகின்றன.

டேனியர்கள் கசாப்பு வேலை செய்வதைப் பார்த்து அமெரிக்கர்கள் மிகவும் தெரிந்து கொள்ளவேண்டியதுண்டு. 50 வருஷத்திற்கு முன் உள்ளூர் கசாப்புத் தொட்டிகளில் அமெரிக்கர் தம் ஆடு, மாடு, பன்றி, முதலியவற்றைக் கொல்வதும் மாமிசத்தை உள்ளூரிலேயே செலவு செய்வதும் வழக்கம். குடியானவனுக்கும் மாமிசத்தை வாங்கிப் புசிப்பவனுக்கும் மத்தியில் கசாப்புத் தொட்டிக்காரன் ஒருவன்தான் உண்டு. குடியானவனுக்கும் தன் பிராணிகளை எந்த நிமிஷத்திலும் கசாப்புத் தொட்டிக்கு அனுப்பலாமென்ற தைரியமிருந்தது. அதனால் சிறு குடியானவர்களும் தத்தமக் கேற்றவாறு ஆடு மாடு முதலிய பிராணிகளை வளர்த்துக்கொண்டும் நிலத்திற்குறிய சாகுபடி செய்து கொண்டும் வந்தனர். குடும்பகாலக்ஷேபச் செலவும் சொற்பமாயிருந்தது. குடியானவனுக்கும் ஏராளமான முதல் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மாமிசம் வாங்கிச்சாப்பிடுகிறவர்களுக்கும் பிறருடைய போட்டி அதிகமின்மையால் விலை அதிகம் கொடுக்க அவசியமில்லை. அமெரிக்காவில் இப்போதெப்படியுள்ளதெனில், மாமிசத்தின் விலை ஆடுமாடுகளைக் கொன்று பாக்கிங் செய்யும் கம்பெனி அதிகாரிகளின் சபை நிர்ணயிப்பதேயாகும். அநேகமாய் அமெரிக்காவில் சிறு கசாப்புத் தொட்டிகளே கிடையாது. சிகாகோ, கன்சர்ஸ், ஒமஹா, செண்ட் ஜோசப், போர்ட் ஓர்த், ஆகிய நகரங்களிலேயே அத்தேசத்தில் செலவாகும் மாமிசம் யாவும் சிப்பங்கட்டி அனுப்பப்படுகின்றது. காலிபோர்னியா ஓரிகான், வாஷிங்டன், இவ்விடங்களுக்கும முற்கூறிய நகரங்களுக்கும் ஆயிரக்கணக்கான மைல்தூரம் உள்ளது. ஆடு, மாடு வகைகள் இத்தனை தூரத்திலிருந்து வருவிக்கப்படுகின்றன. மீண்டும் அவ்வளவு தூரம் மாமிசம விற்பனைக்குச் சிப்பங்களாக அனுப்பப்படுகின்றன. இவ்வாறு வியாபார முழுவதையும் சில விடங்களில் ஒரு முகப்படுத்திவிட்டபடியால் அவர்கள் வைக்கிற விலையையே குடியானவர்கள் பெற்றுக்கொள்ளவும், அவர்கள் கேட்கிற விலையையே மாமிசம் வாங்குவோர் கொடுக்கவும் நேருகிறது. இதனால் உள்ளூரிலிருந்த சிறு சிறு கசாப்புத் தொட்டிகள் ஒழிந்து போயின. ஒன்று முதல் பத்துப்பன்னிரண்டு ஆடுமாடுகளையுடையவன் உள்ளூர் சந்தையில் விற்க முடியாமல் போயிற்று. இதனால் தேசத்தில் அநேக இடங்களில் ஆடு, மாடு, பன்றி முதலியவை வளர்ப்பது நின்று போயிற்று. போட்டியும் ஒழிந்துபோயிற்று. இதனால் விவசாயம் அழிந்து போயிற்று. அமெரிக்காவின் கிழக்கு

மாகாணங்களில் சிறுவயல்களைக் கொண்டு ஜீவித்து வந்தவர்கள் அவ்வாறு இப்போது செய்ய முடியாமல் நஷ்டமடைந்து வருகின்றனர்.

டேனியர்கள் இதற்கு மாறாகவே செய்து வருகின்றனர். இச்சிறு தேசத்தில் தனித் தனியாகச் சிலர் வைத்திருக்கும் கசாப்புத் தொட்டிகளைத் தவிர ஐக்கிய முறையில் நடப்பவை மொத்தம் 46 உள்ளன, ஒவ்வொரு வயலுக்கும் வெகு தூரத்திலில்லாமல் அவைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஒரு கசாப்புத் தொட்டி நடத்துவதற்கு சராசரி செலவு 86,000 டாலர். எல்லா ஆடுமாடுகளையும் ஓர் இடத்திலேயே கொல்லும்படியாக ஏராளமான செலவில் கசாப்புத் தொட்டிகள் ஏற்படுத்தவேண்டியது அனாவசியம். டென்மார்க்கிற் போலவே அமெரிக்காவிலும் அங்கங்கே கசாப்புத் தொட்டிகள் ஐக்கியமுறையில் செட்டுமட்டாகவும் லாபகரமாகவும் நடத்தலாம்.

ஐக்கியப்பாற்சாலைகள் எப்படி ஏற்படுகின்றனவோ அப்படி ஐக்கியக்கசாப்புத் தொட்டிகளும் அதே முறையில் நடத்தப்படுகின்றன. வேற்றிடங்களில் உயர்ந்த விலை கிடைத்தாலும் அங்கத்தினர்கள் யாவரும் ஐக்கியக் கசாப்புத் தொட்டியிலேயே தாங்கள் பன்றிகளெல்லாவற்றையும் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யவேண்டும். தனிக்கசாப்புத் தொட்டிகளில் தங்கள் பன்றிகளை விற்றால் காலக்கிரமத்தில் ஐக்கியக் கசாப்புத்தொட்டிகள் தொலைந்து போகும். கடைசியில் குடியானவர்களுக்குச் சரியான விலை கிடையாமற் போகும் என்பதை அங்கத்தினர் நன்குணருகின்றனர்.

ஐக்கியப் பாற்சாலைகள் எவ்வளவு லாபகரமாய் நடக்கின்றனவோ அப்படியே ஐக்கியக் கசாப்புத் தொட்டிகளும் லாபகரமெனலாம். டென்மார்க்கில் உள்ள பன்றிகளில் சுமார் முக்கால்வாசி ஐக்கியத் தொட்டிகளில் அங்கத்தினராக இருப்பவர்களுக்குச் சொந்தம். 1913-ம் வருஷத்தில் உயிருடன் ஏற்றுமதி சய்யப்பட்ட பிராணிகள் 1,85,00,000 டாலர், பன்றியின் மாமிசம் 4,35,00,000 டாலர் பெறுமானது ஏற்றுமதி செய்யப்பட்டது. ஐக்கிய கசாப்புத் தொட்டிகள் விஷயமாக போட்டிமிகுதி உண்டு. ஐக்கியப் பாற்சாலைகள் விஷயமாய் அவ்வளவு போட்டி இல்லை. ஆனால் ஐக்கிய முயற்சியே நாளுக்கு நாள் வெற்றி பெருவதாகிறது.

டென்மார்க்கில் மொத்தப் பன்றிகளில் மூன்றிலிரண்டு பங்கு குடியானவர்கள் வசம் உள்ளது. அந்த அரைவாசிப் பேர்கள் ஐக்கியக் கசாப்புத் தொட்டிகளிற் சேர்ந்திருக்கின்றனர். 1909-வருஷத்தில் ஐக்கியக் கசாப்புத் தொட்டிகளிலிருந்து குடியானவர்கள் பெற்ற தொகை 8 கோடியே 33 லட்சம் க்ரோனர். இதைத்தவிர வருஷக்கடைசியில் 8 கோடியே 60 லட்சம் க்ரோனர் லாபமாக அங்கத்தினருக்குக் பிரித்துக்கொடுக்கப்பட்டது.

விவசாயிகள் இச்சரக்குகளை விற்பதற்கும் ஐக்கிய முறையான ஏற்பாடு ஒன்று செய்தனர். டேனியர்களுடைய பன்றி மாமிசத்தையும், முட்டைகளையும் விசேஷமாய் விலைக்கு வாங்குகிறவர்கள் இங்கிலாந்திலுள்ளவர்களே. ஆகையால் இங்கிலாந்தில் லண்டன் நகரில் டேனியர்களுடைய பன்றி மாமிசத்தை விற்க ஓர் ஐக்கியசபை ஸ்தாபிக்கப்பெற்றது. சரக்கு செய்வதற்குறிய முதலும், பொருளும், தொழிலும், ஏற்றுமதி செய்யும் வேலையும், விற்பனை வேலையும் இத்தனையும் ஏகமாக ஐக்கிய முறையில் நடத்தப்படுவதால் சர்வ அதிகாரமும், சர்வலாபமும் டேனியப்பொது ஜனங்களையன்றி மற்றவர்களுக்குப் போக இடமில்லை. இந்த ஏற்பாட்டால், பன்றி மாமிசத்திற்கெல்லாம் வியாபாரத் தலைமை வகித்த வேறு சில தனி முதலாளிகளுக்கு அதிகாரம் குறைந்தது. விவசாயிகளுக்கும் தங்கள் சரக்கை விற்றுவர ஒரு நிரந்தரமான இடம் கிடைத்தது.



# விவசாயிகளும் கூட்டுறவும்

ஜெ. ஸி. ராயன், டிப்டி ரிஜிஸ்திரார்

சென்னை லயோலா காலேஜில் நடைபெற்ற அகில இந்திய கதோலிக்கக் காங்கிரஸில் தென் ஆற்காடு ஜில்லா கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் தோழர் ஜெ. ஸி ராயன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது :—

சீமான்களே! சீமாட்டிகளே !!

இந்தியா ஓர் விவசாய நாடென்பதை நீங்கள் யாவரும் அறிந்ததே. சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில் 51,990. கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் நகரங்களின் எண்ணிக்கை 350 ஆகும். 471·0 லெட்சம் மொத்த ஜனத்தொகையில் 407·7 லெட்சம் ஜனங்கள் கிராமாந்திரங்களில் வசிக்கின்றனர். இன்னும் எவ்வளவு காலம் சென்றாலும் கிராமவாசிகளின் எண்ணிக்கைக் குறையுமென்பது சாத்தியமல்ல. சர்வ கலாசாலைகள் அதிகரிக்கலாம்; தொழிற்சாலைகள் பெருகலாம்; வியாபாரம் விருத்தியடையலாம்; சுயராஜ்யம் கிடைக்கலாம். ஆனால் இந்தியா ஓர் விவசாய நாடாகத்தான் இருக்க முடியும்; பெரும்பாலான ஜனங்கள் கிராமங்களைத்தான் வாசஸ்தலமாகக் கொள்ளமுடியும். எனவே, இந்நாட்டின் க்ஷேமம் கிராமங்களில் இருக்கும் விவசாயிகளின் நலத்தைப் பொறுத்திருக்கிறது.

கிராமவாசிகளின் விமோசனத்திற்காக நாம் பல அரிய காரியங்களைச் செய்திருக்கிறோம். கிராமவாசிகளின் கல்விப் பெருக்கிற்கும் அறிவு வளர்ச்சிக்குமென நூற்றுக்கணக்கான கலாசாலைகளை ஸ்தாபித்திருக்கிறோம். ஆஸ்பத்திரிகள், அனாதை சம்ரக்ஷண நிலையங்கள், ஆதரவற்றோர் விடுதிகள் முதலியன நிறுவி இருக்கிறோம். சர்க்கார் மூலமாகவும் மற்றும் பலவகையிலும், நிலங்கள், ரஸ்தாக்கள் கிணறுகள் முதலியனவற்றைக் கொடுத்து உதவி இருக்கிறோம். ஆனால் ஓர் துறையில் மாத்திரம் நாம் போதிய அளவு வேலை செய்யவில்லை. கிராமவாசி தனது நிலத்தின் மூலம் அதிக வருமானத்தை அடையவும், ஓய்வுகாலத்தை வரும்படிக்குரியதாகச் செய்யவும் நாம் பிரயத்தனம் எடுத்துக் கொள்ளவில்லை.

விவசாயிகளின் செலவைக்குறைத்து லாபத்தை அதிகரிக்கச் செய்ய உதவியாக இருப்பது கூட்டுறவு சங்கமாகும். அமெரிக்கா, ஜப்பான், டென்மார்க், ஜெர்மனி போன்ற நாடுகளிலெல்லாம் கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்கு ஆதரவாக இருப்பது கூட்டுறவு சங்கமாகும். இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் ஓர் தலைமுறையாக இருந்து வருகிறது; ஆனால் அவ்வியக்கம் அவ்வளவாக உபயோகப்படுத்திக் கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணம் ஜனங்களின் அறியாமையே யாகும். கூட்டுறவு சங்கமென்றால் தங்கள் இஷ்டம்போல் கடன்வாங்கலாம், தாங்கள் நினைத்தபோது வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கலாமெனத் தப்பிதமாக ஜனங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கத்திலிருந்து கடன் கொடுப்பதின் நோக்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதும், உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களை லாபகரமானதாக விற்பனை செய்ய உதவுவதுமாகும். இந்த உண்மையை சகலரும் அறிந்தால் நன்மை விளையும். இதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

148725

தென் ஆற்காடு ஜில்லாவில் … பேட்டை கிராமத்தில் ஓர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இச்சங்கம் ஏற்கனவே பணத்தைக்கடன் கொடுத்து மிகவும் நஷ்டமடைந்தது. நானும் விவசாய இலாக்கா உதவி டைரக்டரும் இச்சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு சகாயம் செய்ய முற்பட்டோம். இங்கிருந்த விவசாயிகள் குறைந்த வட்டிக்கு பணம் கிடைக்காமையால் நிலக்கடலை பயிர் செய்வதை நிறுத்தி இருந்தார்கள். அவர்களது நிலத்தைப் பார்வையிட்டோம். ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60 முதல் 75 வரை பெறுமானமுள்ள கொட்டை கிடைக்குமென மதிப்புப் போட்டோம். கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராக இருக்கும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 விகிதம் கடன் கொடுத்து உதவும்படி மத்திய பாங்கில் ஏற்பாடு செய்தோம். இந்தப்பணத்தை இரு முறையாக உழுது உரம் போடும் போதும், பின்னர் களை பிடுங்கும்போதும், அறுவடை காலத்திலுமாகக்

JL
VINM, N34, IK : N34.1.1

கொடுக்கத்திட்டஞ் செய்தோம். கடன் வாங்கிய ஆளிடம் ஓர் நிபந்தனை செய்து கொண்டோம். அதாவது நிலத்தை நாங்கள் விரும்பும்போது பார்வையிட அனுமதிப்பது; அறுவடையானதும் கொட்டைகளை கடலூர் கூட்டுறவு விற்பனைப் பண்டசாலைக்கு அனுப்பி வைப்பது. இந்த முறையில் ரூ 1895 கடலைப் பயிரிடுவோருக்குக் கடன் கொடுக்கப்பட்டது. நாங்கள் அடிக்கடி பார்வையிடுவதின் மூலம் கொடுக்கப்பட்ட பணம் சரியான முறையில் உபயோகிக்கப்படுகிறதா என்பதை கவனித்து வந்தோம். அறுவடையானதும் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒப்பந்தப்படி கொட்டைகளை கடலூர் பண்டசாலைக்கு அனுப்பி வைத்தனர். நடந்த விற்பனையில் ரூ 4000 கிடைத்தது. மத்திய பாங்பாங்கிற்குச் சேர வேண்டிய தொகை போக பாக்கி அங்கத்தினர்களின் விகிதாசாரப்படிப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இதனால் கூட்டுறவு சங்கத்தின் நாணயம் காப்பாற்றப்பட்டது. இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது யாதெனில் கடலை சாகுபடியை விட்டொழித்த கிராமத்தில் ரூ. 4000 பெறுமான கடலை விற்பனை செய்யப்பட்டதேயாகும். மேலும் விற்பனையில் கூட்டுறவு பண்டசாலை மூலம் விற்றதால் கண்டி ஒன்றுக்கு ரூ. 3 முதல் ரூ. 4 வரை அதிக லாபம் கிடைத்தது ஓர் விசேஷமாகும். இந்த அதிக லாபத்திற்குக் காரணம் இடையில் தரகன் இல்லாமையும், அவனது போலி அளவு, மோசமான நிறை, உண்மையற்ற விலை ஆகியன கூட்டுறவுப் பண்டசாலையில் இல்லாதிருப்பதுமாகும்.

கிராம ஐக்கிய நாணயச்சங்கங்கள் வெறும் கடன் கொடுக்கும் சங்கங்களாக இல்லாமல் விவசாய உற்பத்திக்கும், உற்பத்தியான பொருளை விற்பனை செய்வதற்கும் உதவியான சங்கங்களாக இருக்குமானால் கிடைக்கக்கூடிய பலன் மெச்சத்தக்கதாக இருக்கும். இக்காரியங்களை யாவும் செய்து முடிக்க வல்லது மனித சக்தியே. ஆங்காங்குள்ள தலைவர்கள் தன்னலமின்றி சிறிது பிரயாசை எடுத்துக் கொண்டால் இவையாவும் எளிதில் நிறைவேறும். ஆனால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்தான் இந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்றால் முடியாது. கிராமங்கள் தோறும் வேலை செய்யக்கூடிய அவ்வளவு உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் சேவையில் இல்லை.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் மார்த்தாண்டம் என்ற இடத்தில் யௌவன கிறிஸ்துவ வாலிப சங்கத்தின் ஆதரவில் கிராமப்புனருத்தாரண வேலை கூட்டுறவு முறையில் நடந்து வருகிறது. இங்கு பல தலைவர்கள் இருக்கின்றனர். மார்த்தாண்டத்தின் அருகாமையில் சுமார் 50 கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களில் முட்டை உற்பத்திசாலை தேன் உற்பத்திசாலை, பனவெல்ல உற்பத்திசாலை, ஆடுமாடுகள் வளர்க்கும் இடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. மாடுகள் வளர்ப்புச் சங்கங்களுக்கு கூட்டுறவு மாட்டுச் சங்கம் என்று அழைக்கப்படுகிறது. மாடு வளர்ப்பதில் சிரத்தையுள்ள விவசாயிகள் இச்சங்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளுகின்றனர். சங்க நிதியிலிருந்து ஜாதிக்காளை வாங்கப்படுகிறது. அக்காளை ஓர் அங்கத்தினரின் பொறுப்பில் விடப்படுகிறது. காளையின் தீனிச்செலவு அங்கத்தினர்களால் ஏற்கப்படுகிறது. காளையை உபயோகித்து நல்ல கன்றுகள் பெறுகின்றனர். மாட்டுச்சங்கங்கள் சிறந்த காளைகளை உற்பத்தி செய்திருப்பதுடன் அதிகமான பால் கறக்கக்கூடிய பசுமாடுகளையும் உண்டாக்கி இருக்கின்றது. இதனால் பசுவின் சொந்தக்காரர்கள் அதிக லாபத்தை அடைய வழி ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவு முறையால் குறைந்த செலவில் மாடுகளின் தரம் மேம்பட்டிருக்கிறது.

இவ்வாறே கோழி வளர்ப்பும், முட்டை உற்பத்தியும், மார்த்தாண்டத்தில் நடைபெறுகிறது. கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் அக்கறையுள்ள விவசாயிகள் ஓர் சங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். ஜாதிக் கோழிகள் வாங்குவதற்குக் கொஞ்சம் கடன் வாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்தச் ஜாதிக்கோழிகள் நாளாவட்டத்தில் பெருகுவதுடன் நாட்டுக்கோழிகளின் தரத்தை உயர்த்துகின்றன. சென்ற ஐந்து வருடங்களாக நடைபெற்ற வேலையால் கோழி வளர்ப்புச் சங்கங்கள் மிகுதியாக ஏற்பட்டிருக்கின்றன. வாரம் ஒன்றுக்கு சிறந்த முட்டையாக 2000 வரை கிடைக்கின்றன. சேகரிக்கப்படும் முட்டைகள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. சாதாரணமான நாட்டு முட்டைகளைக் காட்டிலும் இம்முட்டைகள் இருமடங்கு அதிக விலைக்குப்போகின்றன. மார்த்தாண்டத்திற்கு வெளியூர்களிலிருந்து ஆர்டர்கள் அடிக்கடி வருவதால் அவ்வப்போது அனுப்பப்படுகின்றன. அவ்விதம் அனுப்பப்படும் முட்டைகளில்



அழுகியது ஏதாவது இருக்குமானால் திரும்பி மூன்று தினங்களில் மார்த்தாண்டத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். முட்டையின் நம்பரைக் கொண்டு இன்னாரிடமிருந்து பெற்ற முட்டை என்று கண்டுபிடிக்கப்பட்டு அந்த நபருக்குத் திருப்பி அனுப்பப்படும். அதற்கு பதிலாக வேறு நல்ல முட்டையை வசூலிக்கப்படும். மீண்டும் ஓர் முறை முட்டை பார்சல் செய்யும்போது எந்த நபரிடமிருந்து கெட்டுப்போன முட்டை வந்ததோ அவருக்கு நல்ல முட்டை அனுப்பப்படும். இந்த முறையில் மார்த்தாண்டம் முட்டை உற்பத்தியில் பேர் எடுத்து விட்டது. அதனுடைய முட்டைக்கு விசேஷ மதிப்பு உண்டாகிவிட்டது. இதனால் முட்டை வியாபாரம் இங்கு பிரபல்யமாகும் என்பதில் சந்தேகமில்லை.

மார்த்தாண்டத்தில் நடைபெற்றுவரும் ஏனைய கூட்டுறவு சங்கங்களைப்பற்றி நான் கூற வேண்டிய அவசியமில்லை என நினைக்கிறேன். சில தொண்டர்கள் உண்மையாக ஊழியஞ்செய்தால் கிராமவாசியின் வருமானத்தை கூட்டுறவு முறையைக் கொண்டு பலவகையிலும் பெருக்கலாம் என்பதற்கு நான் கூறியுள்ள திருஷ்டாந்தம் போதுமானதென நினைக்கிறேன். இளைஞர்களைக் கிராமத் தொண்டிற்குத் தயாரிக்க மார்த்தாண்டத்தில் ஓர் பள்ளிக்கூடம் வைத்து நடத்தப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இளைஞர்கள் அங்கு பயிற்சி பெறுகின்றனர். கூட்டுறவிற்கு பாஷ்யம் எழுதியுள்ள திரு எ. டப்ளியூ. உல்ப்போன்ற பெரியார்கள் இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய இடங்களில் நடந்திருக்கும் வேலையைக் கொண்டு கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கான வேலை பாதிரிகளுடையதாகுமெனக்கூறி இருக்கிறார் இந்நாட்டில் அது அவ்வளவு சாத்தியமல்ல இந்நாட்டில் பல சங்கங்கள் இருக்கின்றன. இச்சங்கங்கள் பெரும்பாலும் இருப்பது தெரியாமலிருக்கும்; வைஸ்ராய் விஜயம் செய்தாலோ அல்லது சீர்திருத்தக் கமிஷன் ஒன்று வந்தாலோ இச்சங்கங்கள் இருப்பது தெரியவரும். அக்காலங்களில்தான் இச்சங்கங்கள் மும்முரமாக வேலை செய்கின்றன. ஏனைய காலங்களில் தூங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த சங்கங்கள் என்றும் வேலை செய்ய ஓர் திட்டம் தயாரித்துக்கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட இடங்களில் வேலை செய்வதென வரையறுக்க

வேண்டும். கௌரவ ஊழியர்களைக் கொண்டோ அல்லது சம்பளம் கொடுத்தோ குறிப்பிட்ட இடங்களில் மார்த்தாண்டத்தில் நடைபெறுவது போன்ற முறையில் வேலைகளைச் செய்யவேண்டும். கௌரவ வேலைக்காரர்களைவிட சம்பளத்திற்கு வேலை செய்வோர்களே மேல் இக்காரியங்களைச் செய்ய செல்வ நிலையில் அருகதையுள்ள சங்கங்கள் இல்லாமலில்லை. அவ்விதம் நிதியில்லாத சங்கங்கள் இம்மாதிரியான வேலைத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரின் பொதுஜன ஆதரவு எளிதில் கிடைக்கக்கூடுமென நம்புகிறேன்.

# இடி! இடி!!

## சென்னை கவர்னர் பொன்மொழி.

அண்ணாமலை நகரில் ஜனவரி-மீ 2-வ இந்தியப் பொருளாதார மகாநாட்டைத் திறந்து வைத்த போது மேன்மை தங்கிய சென்னை கவர்னர் இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் நிலைமையைப்பற்றி குறிப்பிட்டதாவது:—

இந்தியப் பொருளாதார நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்ய நிபுணர்கள் பலர் கூடியுள்ள இந்த சமயத்தில் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும், கூட்டு விற்பனையைப்பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன். விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்ய நாம் ஓர் வழி காணாமல் விவசாய விருத்திக்குப் பாடுபடுவதால் விவசாயிகளுக்கு எவ்வித நன்மையுமில்லை. இந்நாட்டிலுள்ள விவசாயிகள் விசித்திரமானவர்களாக எனக்குத் தோன்றுகின்றனர். அவர்கள் தங்களின் விளைபொருள்கள் லாபகரமான விலைக்கு எடுபடாவிடில் அதனை எந்த வகையில் லாபகரமானதாகச் செய்யலாம் என்று சிந்தனை செய்கிறார்களில்லை. தலையில் கையை வைத்துக் கொண்டு சர்க்கார் கண் திறந்து பார்க்க மாட்டார்களா என்று ஓலமிடுகின்றனர். விளை பொருள்கள் உயர்ந்த விலைக்குப்போகும்படி சர்க்கார் கூடிய வரையில் கவனிப்பார்கள். எனினும் விவசாயிகள் தங்கள் முன்னேற்றத்திற்கு தன் முயற்சியும் தன் நம்பிக்கையும் கொண்டு பாடுபட வேண்டுமென்பதை உணரவேண்டும்.

விவசாயிகளுக்கு உதவி புரியக்கூடிய ஸ்தாபனம் கூட்டுறவுச் சங்கமாகும். ஆனால் இங்கிலாந்திலுள்ளவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்களோ

அதன்படிப் பார்த்தால் இங்குள்ள சங்கங்களைக் கூட்டுறவுச் சங்கங்களாகக் கூறமுடியாது. இங்கிலாந்தில் பண்டங்களை கூட்டாய் வாங்குகின்றனர்; கூட்டாய் விற்பனை செய்கின்றனர். இதனால் அங்கத்தினர்கள் பெரும் பயனடைகின்றனர். இந்த முறையில் இங்கிலாந்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வெகு நன்றாக நடைபெற்று வருகின்றன. சங்கங்களை நிர்வகிக்கும் தலைவர்களும், காரியதரிசிகளும் சாமர்த்தியசாலிகளாக இருந்தால் இத்துறையில் அடைதற்கரிய பெரும் காரியங்களை சாதிக்கலாம். ஆனால் இந்த மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாதிரியான வேலைகளைச் செய்யவில்லை. இங்குள்ள சங்கங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று சொல்வதற்குக்கூட கொஞ்சமும் யோக்யதை இல்லை. உண்மையைக் கூறுமிடத்து இங்கிருப்பனயாவும் லேவாதேவிச் சங்கங்களேயன்றி வேறல்ல. கூட்டுறவு இயக்கத்தில் எனக்கு உள்ள தொடர்பாலும் இங்கிலாந்தில் அவை செய்து வரும் வேலைகளில் எனக்குள்ள அனுபவத்தாலும் நான் இவ்விதம் கூற நேர்ந்தது. இங்குள்ள சங்கங்கள் இங்கிலாந்திலுள்ள சங்கங்களைப்போல் நடக்க வேண்டுமென்றும் அவைகளைப்போல் பொது ஜனங்களுக்குப் பிரயோஜனகரமான ஸ்தாபனங்களாக இருக்கவேண்டு மென்றும் நான் விரும்புகிறேன்.

சென்னை கவர்னரின் பொன் மொழியை இந்திய கூட்டுறவாளருக்கு அர்ப்பணம் செய்கிறோம். கூட்டுறவுச் சங்கம் என்றால் ஐந்து ரூபாய் கட்டினால் ஐம்பது ரூபாய் கொடுக்கும் பாங்கு என எண்ணிக் கொண்டிருக்கும் கிராமவாசிகளுக்கு கவர்னரின் பிரசங்கம் வியப்பைத்தரத்தக்கதாக இருக்கும். ஆனால் கூட்டுறவு இயக்கத்தை அறிந்த எவரும் இதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்திய கூட்டுறவு அகாதிக்குக் கர்த்தாக்களாக விளங்கும் நிபுணர்கள் இது காறும் எவ்வளவு தூரம் உறங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது கவர்னரது சொற்பொழிவின் மூலம் நன்கு புலனாகிறது. கவர்னரின் அறிவுரையை நாம் பாராட்டுகிறோம். இக்குறைகளைப் போக்கவும் கூட்டுறவு இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்கவும் கவர்னர் அவர்கள் தக்கன செய்வாரென எதிர்பார்க்கிறோம். இது ஒரு புறமிருக்க, கவர்னரின் பிரசங்கம் விவசாயிகளுக்கு ஓர் வகையில் திருப்தியை அளிக்க முடியாதென்றே எண்ணுகிறோம். கூட்டுறவு இயக்க வளர்ச்சியைக் கருதி கவர்னர் பிரசங்கத்தை நாம் போற்றுகிறோமேயொழிய நிலவரியைக் குறைக்கவேண்டுமென கிளர்ச்சி செய்யும் விவசாயிகளுக்கு முட்டாள் பட்டம் கட்டவேண்டுமென்ற எண்ணத்துடன் அவரது பிரசங்கம் இருக்குமானால் நாம் அதனை ஒருக்காலும் ஆதரியோம். வரியைக் குறைக்க வேண்டுமென்பதில் விவசாயிகள் ஓர் புறம் கிளர்ச்சி செய்தாலும் கவர்னர் அவர்கள் கூறியுள்ள முறையைப் பின்பற்றி நன்மை அடைவார்களாக!

## சென்னை கூட்டுறவு "கிராம்வெல்"

ஆங்கில சரித்திரத்தை வாசித்தவர்களுக்கு "கிராம்வெல்" என்பவர் யார் என எடுத்துரைக்க வேண்டியதில்லை. அதுபோல் சென்னை மாகாண கூட்டுறவாளர்களுக்கு தோழர் வி. டி. நாயகம் அவர்களைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை. "கிராம்வெல்" தமது நிர்வாகத்திறமையால் உலகப்பிரசித்தி பெற்றார். "செய்வன திருந்தச்செய்" என்ற கொள்கையைக் கொண்டவர் அப்பெரியார். அதனால் அவருடைய பெயருக்கே ஓர் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது அவரைப்போன்று தோழர் வி. டி. நாயகம் கூட்டுறவு உலகில் விளங்குகிறார். சுயநலக்காரர்களை ஒழித்தும், எதேச்சாதிகாரிகளை அடக்கியும், பொது ஸ்தாபனங்களைத் தமது பிதார் ராஜ்ஜிய சொத்தாக மதித்தும் வந்த சூழ்ச்சி நிறைந்த அயோக்கியர்களை விரட்டியும் தமது கடமையைப் பாரபட்சமின்றி செய்து வந்த இவரை சென்னை கூட்டுறவு "கிராம்வெல்" என நாம் அழைக்க விரும்புகிறோம்.

கூட்டுறவு இலாக்காவில் உத்தியோகம் பார்த்து வருபவர்களை இரு பகுதியினராகப் பிரிக்கலாம் அதாவது, கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையுள்ளவர்களாய் உணர்ச்சியுடன் உழைப்பவர்கள், வாங்கும் சம்பளத்தை உத்தேசித்து வேலை செய்பவர்கள். தோழர் நாயகம் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையுள்ள ஒரு சிலரில் முதன்மையானவர். 1921 ௵ தமது 43 வது வயதில் டிப்டி ரிஜிஸ்தரார் பதவியை ஏற்று 1933 ௵ நவம்பர் ௴ வரை இவர் கூட்டுறவு இலாக்காவில் சேவை புரிந்து வந்திருக்கிறார். இவரைப்போன்று இத்தனை வருஷகாலம் உத்தியோகம் வகித்தவர்கள் இந்த இலாக்காவில் இல்லாமலில்லை. ஆனால் அவர்களுக்கும் இவருக்கும் ஓர் பெரும் வித்தியாசம் உண்டு. அதுவே இவருக்குள்ள தனிப்பெருமையாகும்.



ஏனைய மாஜி உப ரிஜிஸ்திரார்களில் பெரும்பாலோர் 'அம்மா பிள்ளை' களாகவே இருப்பார்கள். அதாவது, தெளிவாகக் கூறுமிடத்து அவர்களைப்பற்றி கூட்டுறவு இலாக்கா காரியாலய குமாஸ்தாக்களைத் தவிர வேறு எவரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்க முடியாது. ஆனால் தோழர் நாயகமோ தாம் வகித்த டிப்டி ரிஜிஸ்திரார் பதவியை விட்டு விலகியது முதல் கூட்டுறவாளர்களுக்கு ஓர் தலைவராக விளங்குகிறார்

ஓர் பதவியோ அல்லது அதிகாரமோ கிடைத்தால் பெற்ற பதவியைப் பயன்படுத்திக் கொள்ளாத முத்தண்ணாக்களும், கிடைத்த அதிகாரத்தை துஷ்பிரயோகஞ் செய்யும் மகான்களும் நம் நாட்டில் பலருண்டு. ஆனால் தோழர் நாயகம் தமது பதவியையும், அதிகாரத்தையும் பொது நலத்திற்கே உபயோகப்படுத்தி வந்திருக்கிறார். இத்தகைய ஒரு பெரியார் இவ்வளவு சமீபகாலத்தில் உத்தியோகத்தை விட்டு விலகியதற்கு அநேகர் வருந்தலாம் ஆனால் ஐந்து வருடங்களுக்கு முன்னதாகவே தோழர். நாயகம் உத்தியோகத்தை விட்டு விலகவில்லையே என்பதற்காக நாம் விசனிக்கிறோம். ஏனெனில் இவ்வளவு காலம் அவர் உத்தியோகத்திலேயே இருந்தது கூட்டுறவு இயக்கத்திற்கு பெரும் நஷ்டம் என்பதே நமது அபிப்பிராயம். கூட்டுறவு இயக்க வளர்ச்சியை விரும்புவோர் எவரும் தோழர் நாயகம் உத்தியோகத்திலிருப்பதைவிட இல்லாதிருப்பதே மேலென்பர். இதுவரையில் உத்தியோகத்திலிருந்ததால் கூட்டுறவு இயக்கம் அடைந்த நஷ்டத்தை விரைவில் ஈடு செய்யுமாறு தோழர் நாயகம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## இந்திய "ஹிட்லர்கள்"

தோழர் எஸ். கே. யக்கிய நாராயண அய்யர் அவர்களைப்பற்றி கூட்டுறவாளர்கள் நன்கறிவர். சென்னை கூட்டுறவு சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து கூட்டுறவு இயக்கத்திற்கு அவர் ஆற்றி வரும் அருந்தொண்டு பாராட்டத்தக்கது. தோழர் அய்யர் அவர்களின் அறிவைப் பெருக்கும் கட்டுரைகளும், ஆணித்தரமான அபிப்ராயங்களும், அச்சமற்ற கண்டனங்களும் நிறைந்த ஆங்கில கூட்டுறவு சஞ்சிகை கூட்டுறவாளருக்கு ஓர் நல் விருந்தாகும். தோழர் அய்யர் கூறும் அபிப்ராயங்கள் கூட்டுறவாளரால் ஓர் அத்தாட்சியாகக் கொள்ளப்படுகிறது. இங்ஙனமிருக்க தோழர் அய்யரைக் கண்டிக்க நேர்ந்தமைக்கு நாம் வருந்தாதிருக்க முடியாது. தோழர் அய்யர் அவர்கள் 1933 ௵ ஜனவரி ௴ 6 ௳ நடைபெற்ற கொச்சி கூட்டுறவாளர் மகாநாட்டில் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவு 8 ௳ 'ஹிந்து' பத்திரிகையில் 11 வது பக்கத்தில் வெளி வந்துள்ளது. அதுகாலை அவர் கூறியுள்ளதாவது:—

"இந்தியாவின் ஏனைய பாகங்களைக் காட்டிலும் கொச்சி சமஸ்தான வாசிகள் சில விசேஷ சௌகரியங்களைப் பெற்றிருக்கின்றனர். இங்குள்ள நீங்கள் யாவரும் சிறந்த வியாபாரிகளே. வியாபாரிகளான உங்களுக்கு அழகு கிடைத்துள்ள சௌகரியங்களைத் தக்க வழியில் பயன் படுத்திக்கொள்வதேயாகும். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்கள் சுயராஜ்யம் பெறவேண்டுமென கிளர்ச்சி செய்கின்றனர். பிரிட்டிஷ் இந்திய அரசியல் வாதிகளில் சிலர் பின் வருமாறு முணுமுணுக்கின்றனர். தேச முன்னேற்றத்திற்கான திட்டங்களைக் கொண்டு வருவதென்பது சாத்தியமில்லாதிருப்பதற்குக் காரணம் ஆள்வோர் ஆளப்படுவோர் ஆகிய இருவரும் ஓர் இனத்தவராக இல்லாதிருத்தலும், ஆளப்படுவோர் நலத்தில் ஆட்சி புரிவோர் அவ்வளவு அக்கறை காட்டாதிருத்தலுமாகும் என்கின்றனர். இம்மாதிரியான பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ளது போன்ற தொல்லைகள் உங்கள் சமஸ்தானத்தில் இருக்க இடமில்லை. உங்களை ஆட்சி புரியும் மகாராஜா ஓர் கல்விக்களஞ்சியம்; அறிவின் உறைவிடம்; தர்மதயாளு; சாந்த சொரூபி; இத்தகைய சத்திய சந்தனை மகாராஜாவின் ஆட்சியின் கீழ் நீங்கள் என்னென்ன சௌகரியங்களையும், நன்மைகளையும் அடைந்து அனுபவித்து வருகிறீர்களோ அவற்றினை எல்லாம் பெறவேண்டுமென்று தான் இன்று பிரிட்டிஷ் இந்தியா வாசிகள் விழைகின்றனர். நீங்கள் பெற்றுள்ள உரிமைகள் தங்களுக்குக் கிட்டும் நாள் என்றோவென ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்."

தோழர் அய்யர் அவர்களின் அபிப்ராயத்தைக் கேட்ட நாம் உண்மையில் ஆச்சரியமடைகிறோம். இதுபோன்ற அபிப்ராயத்தை தோழர் அய்யர் போன்ற நிபுணர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கவில்லை. காலனு பத்திரிகை வாசித்து அரசியல் ஞானம் பெற்ற ஓர் இளைஞன்கூட இதுபோன்ற

அபிப்ராயத்தைக் கேட்டால் எள்ளி நகையாடுவான். தோழர் அய்யர் சொற்பொழிவுக்கு வியாக்யானம் செய்யுங்கால் தத்து வார்த்தம் மாத்திரம் ஒன்றும் புகுத்தப்படாதிருக்குமானால் நாம் கூறுவது சரியென்றே நினைக்கிறோம். "பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ளவர்கள் அடிமைகள்; சுதேச சமஸ்தானத்தில் வாழ்பவர்கள் சுதந்திரம் உள்ளவர்கள்; சுதேச சமஸ்தானத்திலுள்ளவர்களுக்குள்ள சௌகரியம் பிரிட்டிஷ் இந்திய வாசிகளுக்கு இல்லை. சுதேச சமஸ்தான பிரஜைகள் எத்தகைய சுதந்திரத்தை அனுபவித்து வருகிறார்களோ அதைத்தான் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ளவர்கள் அடைய முயற்சிக்கின்றனர்" என்பது தோழர் அய்யரின் ஆழ்ந்த கருத்தென நினைக்கிறோம். இத்தகைய கருத்தை தோழர் அய்யர் அவர்கள் உண்மையில் கொண்டிருப்பரேல் கூட்டுறவாளர்கள் திகைப்படையாதிருக்க முடியாது. பிரிட்டிஷ் இந்திய வாசிகளை "அடிமைகளென" தோழர் அய்யர் நினைப்பாரானால் சுதேச சமஸ்தான வாசிகளை "அடிமைக்கு அடிமைகள்" என நாம் கூற விரும்புகிறோம். "அடிமைக்கு அடிமைகளாக" இருக்கும் சமஸ்தானப் பிரஜைகளை விட "அடிமைகளாகவுள்ள" பிரிட்டிஷ் இந்திய வாசிகள் மேலானவர்கள் என்பதை தோழர் அய்யர் அறியாததேனோ? எதேச்சாதிகாரப் பித்தம் நிறைந்த இந்திய ஹிட்லர்களான சுதேச சமஸ்தான அதிபதிகளின் ஆளுகையின் கீழுள்ள பிரஜைகள் அனுபவித்து வரும்படியான ஜனநாயக ஆட்சி முறையையோ, அரசியல் உரிமையையோ, பேசும் சுதந்திரத்தையோ, எழுதும் சுதந்திரத்தையோ, பொதுக்கூட்டம் நடத்தும் சுதந்திரத்தையோ அடைவேயண்டுமென்ற நிலையில் இன்றையதினம் பிரிட்டிஷ் இந்திய வாசிகள் இல்லை என்பதை தோழர். அய்யர் உணர்வாராக.

## அன்பரே வருக !

திருச்சி டிப்டி ரிஜிஸ்தராராக இருந்த தோழர் பீமராஜ முதலியார் அவர்கள் வேலூருக்கு மாற்றப்பட்டதாகவும், வேலூரில் டிப்டி ரிஜிஸ்தராராக இருந்த தோழர். சாமுவேல் அவர்கள் திருச்சிக்கு மாற்றப்பட்டதாகவும், தெரிகிறது. தோழர். முதலியார் அவர்கள் திடீரென திருச்சியை விட்டு புறப்பட்டுச்செல்ல நேர்ந்தது கூட்டுறவாளர்களிடையே பெரும் பரபரப்பை உண்ணிவிட்டது. கூட்டுறவு இலாக்கா குழுவினரைத்தவிர எனையோர் அவருக்கு விடை கொடுத்து அனுப்ப அவகாசமோ சௌகரியமோ, சந்தர்ப்பமோ இல்லாமற்போனது, கூட்டுறவாளர்களுக்கு உண்மையில் ஏமாற்றத்தைக் கொடுத்ததுடன் விசனிக்கத்தக்கதுமாகும்.

தோழர் முதலியார் அவர்கள் திருச்சியை விட்டுச் செல்வது கூட்டுறவாளர்களுக்கு மனமில்லாதிருக்குமானாலும் தோழர் சாமுவேல் அவர்கள் வருகையை யுத்தேசித்து ஒருவாறு அவர்கள் மனம் நிம்மதியடையுமென நம்புகிறோம். தோழர் முதலியாருக்கு வழியனுப்பி வைத்த நாம் தோழர் சாமுவேல் அவர்களை மனமுவந்து வரவேற்கிறோம். இந்நகருக்கு தோழர் சாமுவேல் புதியவரல்ல. கூட்டுறவாளர்களின் பழைய நண்பர். இந்த ஜில்லாவின் தேவைகளையும், குறைகளையும் பற்றி நன்குணர்ந்தவர். மனிதரையும், மனிதர் தரத்தையும் அறிந்தவர். எனவே, இன்றுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஒழுங்கான முறையில் நடப்பவை நீங்கலாக ஏனைய வற்றினைக் கூடுமானால் திருத்தியோ அன்றேல் ஒழித்தோ தக்க முறைகளைக் கையாள்வதின் மூலம் இயக்கத்தை வலுவடையச் செய்வாரென எதிர் பார்க்கிறோம். புதிய சங்கங்கள் ஸ்தாபிப்பதில் அவர் தமது கவனத்தைச் செலுத்துவாரென நம்புகிறோம். தோழர் சாமுவேல் அவர்களின் பெருமையைப்பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. அவரின் வருகையை ஆவலுடன் கூட்டுறவாளர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருப்பது அவர் அன்பு ததும்பும் நெஞ்சர் என்பதற்குப் போதிய அத்தாட்சியாகும். அன்பர் சாமுவேலே வருக! வருக !! உமது வரவு நல்வரவாகுக !!!

## மாணவர்—மாதர் கடமை

எர்ணகுளம் மகாராஜா கல்லூரியில் ஜனவரி மீ 11ௗ தோழர் தேவதார் "கூட்டுறவும் அதனால் விளையும் நன்மைகளும்" என்ற பொருள்படும்படி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். அதன் சாராம்சமாவது:—

கூட்டுறவு முறையைப் பின்பற்றியதால் மேல் நாட்டினர் பல வழியிலும் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். உலகம் பூராவும் கூட்டுறவு முறையைக் கையாள முற்பட்டிருக்கின்றன. மாணவர்கள் இவ்வியக்கத்தில் விசேஷ ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவென்பது ஏழைகளைக் கைதூக்கிவிட ஏற்பட்ட இயக்கமாகும். நம்மில்

சிலர் உச்ச நிலையில் இருக்கையில் நம்மிலும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை உயர்த்த நினைப்பதே மனிதத் தன்மைக்கு அடுக்கும். இப்பரோபகார சிந்தனை நம்மில் இல்லையேல் உலகம் நடவாது. சமூதாய வாழ்க்கையை மேம்படச் செய்ய கூட்டுறவு உதவுகிறது. இங்கிலாந்தில் தொழிற்கட்சி அடைந்த உன்னத பதவியை நீங்கள் அறிந்ததே. பிரிட்டிஷ் தொழிலாளரின் முன்னேற்றத்திற்குக் காரணம் கூட்டுறவு இயக்கமே.

கொச்சி மாதர்கள் கூட்டுறவு இயக்கத்தில் ஊக்கங்காட்டாதது வருந்தத்தக்கது. இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குக் காரணம் மாதர்களே யாவர். மாதர் கூட்டுறவுச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு இலவசமாக மருத்துவச்சிகளைக் கொடுத்து உதவுகின்றன. அந்த அளவிற்கு கொச்சி மாதர்கள் செல்ல இயலாவிடினும் இன்றிருப்பதுபோல் உரக்கத்தில் இல்லாமல் முன்வந்து வேலை செய்யவேண்டியது அவசியம். மாதர் வெளியில் வந்து வேலை செய்யாமைக்குக் காரணம் அவர்களிடம் இயற்கையில் இருந்து வரும் கூச்சமே. இதனை யுத்தேசித்து தனித்த கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபித்தல் மேல்.

இந்த சமஸ்தானத்திலுள்ள மாணவர்கள்கூட கூட்டுறவு இயக்கத்தை அலட்சியம் செய்திருப்பதற்கு விசனிக்கிறேன். இந்தியாவின் ஏனைய பாகங்களில் மாணவர்கள் அழகான முறையில் வேலை செய்கையில் இங்குள்ளவர்களோ கொஞ்சமும் அக்கரையற்றவர்களாக இருக்கிறார்கள். தேகாப்பியாசச் சங்கங்களின் அங்கத்தினர்களாகச் சேர்வதுபோல் கூட்டுறவு சங்கங்களில் ஒவ்வொருவரும் சேரவேண்டும்.

“கூட்டுறவு” ஓர் சிறந்த “மதம்.” பிறருக்கு உதவி செய்வதை லட்சியமாகக்கொண்ட ஓர் மதமே நமக்குத் தேவை. கூட்டுறவு நமது தேவையைப் பூர்த்தி செய்யத்தக்கதாக இருப்பதுடன் மனிதனுக்கு உணர்ச்சியை ஊட்டும் இயக்கமாகவும் இருக்கிறது. கூட்டுறவு சங்கமென்பது தர்ம சத்திரமன்று. சமூதாய ஊழியர்கள் பிச்சை அளித்தல் என்பதை அறவே வெறுக்கின்றனர். ஒரு தேசத்தின் முன்னேற்றத்தையும் க்ஷேமத்தையும் அறிதற்கு அளவு கோவாக இருப்பது கூட்டுறவு இயக்கமடைந்துள்ள வெற்றியாகும்.

தோழர் தேவதார் உபதேசம் பொன்னே போல் போற்றத்தக்க தாகும். அவருடைய உபதேசம் கொச்சி மாணவருக்கு மாத்திரமென்றோ, கொச்சி மாதர்களுக்கு மாத்திர மென்றோ கூறமுடியாது. இந்திய மாணவர்களுக்கும், இந்தி மாதர்களுக்கும் பொதுவான தாகும். தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகள்தோறும் மாணவர் கூட்டுறவு சங்கங்கள் தோன்ற வேண்டுமென்றும், நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும மாதர் சங்கங்கள் ஏற்படவேண்டுமென்றும் விரும்புகிறோம். விடுமுறை காலங்களில் வீண்காலம் போக்கும் மாணவர்கள் மனம் வைத்தால் தங்களுக்கு மாத்திரமன்றி மற்றும் பல சங்கங்களை ஸ்தாபிப்பது எளிது.

மாதர்கள் கூச்சம் காரணமாகக் கூட்டுறவு சங்கங்களில் கலந்து கொள்வதிற்கில்லை என தேவதார் கூறியுள்ளார். ஸ்ரீரங்கம் போன்ற இடங்களில் உத்சவத்திற்கென போகவும், இடிபடவும், குழந்தைகளுடன் மோதுண்டு வரவும், நகைகளைப் பரிகொடுக்கவும் மாதர்களுக்குக் கூச்சமிருப்பதில்லை. ரயிலிலோ, மோட்டாரிலோ சவாரி செய்வதில் கூச்சமிருப்பதில்லை. சினிமா, டிராமா பார்க்கச் செல்ல கூச்சமிருப்பதில்லை. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்வதென்றால்தான் அவர்களுக்குக் கூச்சமாக இருக்கிறது போலும்! இது காரணமாக நாம் மாதர்களுக்கெனத் தனித்த சங்கங்கள் தேவை இல்லை எனக்கூறுவதாக எவரும் நினைக்கவேண்டாம். சங்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்குத் தக்கபடி நன்மை விளையுமென்பதே நமது அபிப்ராயம். அதனை உத்தேசித்து மாதர் சங்கங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் இன்றுள்ள சங்கங்களில் அவர்கள் சேராதிருப்பதற்குக் காரணம் அவர்களுக்குள்ள கூச்சம் என்பது பொறுத்தமுடையதாக இல்லை. தேர் திருவிழாக்களில் அவர்களுக்குள்ள ஆர்வமும், ஸ்தலயாத்திரையிலுள்ள ஊக்கமும், சினிமா, டிராமாவிலுள்ள உற்சாகமும், கூட்டுறவுச்சங்க விஷயத்தில் இருக்குமானால் அவர்கள் கூச்சம் பறந்து போகுமென்றும் சங்கங்களெல்லாம் மாதர் மயமாகிவிடு மென்றும், ஆண்களுக்கு இடமில்லாது போகுமென்றும் திட்டவட்டமாகக் கூறுவோம். இதனை எவரும் மறுக்க முடியுமா?

### போக்கு வரத்துத் தொழிலாளர் சங்கம், திருச்சி

இச்சங்கம் 1933 ஞு ஜூன் மீ 25 உ வண்டிக்காரர்களுக்காக நிறுவப்பட்டது. வண்டிக்காரர்

களின் முன்னேற்றத்திற்கு இச்சங்கம் இன்றியமையாததெனலாம். இத்தொழிலாளர் சங்கத்தின் நோக்கம் கூட்டுறவு பாங்கொன்று அமைப்பது; கூட்டுறவு ஸ்டோர் ஒன்று நிறுவது; கூட்டுறவு தொழிற்சாலை ஒன்று ஸ்தாபிப்பது. பாங்கின் மூலம் மாடு குதிரை முதலியன வாங்க குறைந்த வட்டிக்கு பணம் கொடுத்து உதவுதல்; ஸ்டோர் மூலம் கொள், பருத்தி, புண்ணாக்கு, அரிசி முதலியனவற்றை மொத்தமாக வாங்கிப் பிரித்து எடுத்துக் கொள்ளல்; தொழிற்சாலையில் தேவையான புதிய வண்டிகள் செய்வதுடன் அவ்வப்போது வண்டிகளைப் பழுது பார்த்து வரல். இவை சித்தி பெற முயற்சி செய்யப்படுகிறது. நமது தோழர்கள் வெற்றி பெறுவார்களாக!

148725

### தோல் வேலைத் தொழிலாளர் சங்கம். திருச்சி

இச்சங்கம் 1933 ௵ நவம்பர் ௴ 15 ௳ ஸ்தாபிக்கப்பட்டது. இத்தொழிலாளர்களது சேவை நாட்டிற்கு இன்றியமையாதது. இவர்களது தொழிலோ மிகச் சிறந்ததுடன் லாபகரமானது. ஆனால் இவர்கள் மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பது வருந்தத்தக்கது. இத்தொழிலாளருக்கென சென்ற 13 வருடங்களுக்கு முன்னால் இரு கூட்டுறவு பாங்குகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை இரண்டும் சரியாக வேலை செய்யவில்லை. அதற்குக் காரணம் அக்காலத்தில் தொழிலாளர்கள் கண் விழியாதிருந்தனர். இன்றுள்ள நிலையில் அன்றிருந்தால் இவர்களுக்கென ஏற்பட்டுள்ள இரு பாங்குகளும் இன்றுள்ள நிலையில் இருக்க மாட்டா. இத்தொழிலாளர்கள் அவ்விரு பாங்குகளையும் ஒன்றாக இணைத்து ஒழுங்கு படுத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். இவர்கள் முயற்சியில் சித்தியடைவார்களாக!


### தையல் தொழிலாளர் சங்கம். திருச்சி

இச்சங்கம் 1934 ௵ ஜனவரி ௴ 1 ௳ ஸ்தாபிக்கப்பட்டது. இத்தொழிலாளர்கள் யாவரும் கல்வியறிவு வாய்ந்தவர்கள். எதிர் காலத்தில் தொழிலாளர் தலைவர்களாக விளங்கக்கூடிய அறிவும், ஆற்றலும் நிரம்பப்பெற்றவர்கள். நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு உதவுகின்ற இவர்கள் இதுவரையில் சங்கமொன்று நிறுவாதிருந்தது நமக்கு ஆச்சரியமாக இருந்தாலும் இனியாவது தொடங்கிய வேலையை பூர்த்தி செய்வார்களென எதிர்பார்க்கிறோம். இவர்களுக்கு ஓர் கூட்டுறவு பாங்கு ஸ்தாபிக்கப்படவேண்டியது அவசியம். இதனை இத்தொழிலாளர்கள் நன்குணர்ந்திருக்கிறார்களாதலின் நாம் அவர்களுக்கு அதிகம் வற்புறுத்திக்கூற விரும்பவில்லை. "நான் பெரியவன்", "நீ சிறியவன்" என்ற உயர்வு தாழ்வுகளை விட்டொழித்து தையல் தொழிலாளர் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்ச்சியுடன் வேலை செய்வார்களாக!

### மண்ணச்சநல்லூர் கூட்டுறவு பாங்கு.

மண்ணச்சநல்லூரை ஓர் கிராமமாகவும் சொல்லலாம், நகரமாகவும் சொல்லலாம். கிராமம் நகரம் இவை இரண்டினுக்கும் உள்ள சிறப்பை மண்ணச்சநல்லூர் பெற்றிருக்கிறது. வருடமொன்றுக்கு ரூ. 11,000 நிலவரியாகச் செலுத்தக்கூடிய மிராசுதார்களும், ரூ. 3000 வருமான வரியாகச் செலுத்தக்கூடிய வியாபாரிகளும், சுமார் 450 நெசவுத் தொழிலாளரும், 150 சுண்ணாம்புத் தொழிலாளரும் இங்கு இருக்கின்றனர். இங்குள்ள கூட்டுறவு பாங்கு சற்றேறக்குறைய 13 வருடங்களுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்டது. இவ்வூர் வியாபாரத் துறையில் வகித்துவரும் நிலையை கவனிக்கின் இது சமயம் இந்த பாங்கில் குறைந்த பக்ஷம் 1000 அங்கத்தினர்களாவது இருக்கவேண்டும்; வருஷம் ஒன்றுக்கு லெட்ச ரூபாய்க்காவது லேவாதேவி நடந்திருக்கவேண்டும். ஆனால் இந்த பாங்கின் நிலை என்ன? இப்பாங்கில் 33 பேர்கள் தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்களென்று தெரிகிறது ஆனால் ரூ. 7000 வரை இவர்களுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கிறதாக அறிகிறோம். கொடுக்கப்பட்ட பணம் வசூலாகாத காரணத்தால் பாங்கின் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும் அறிகிறோம். இச்சீர் கேட்டிற்குக் காரணத்தைக் கண்டுகொள்ளுமாறு கூட்டுறவு இலாக்கா அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம். இனியாவது மண்ணச்சநல்லூர் வாசிகள் கண் விழிப்பார்களாக!

N34·11




We are
Gold Medalists
in
all the Exhibitions
from 1916
onwards.




சஞ்சீவி **குழந்தைகளுக்கு** சஞ்சீவி

குரு மருந்துகளை வெல்ல வேறு மருந்து

கிடையாது.

அனுபவத்தில் காணலாம்.



குரு பால் பவுடர்.

**குரு**

மருந்துசாலை,

திருச்சிராப்பள்ளி



குரு சந்தான சோர்ணம்
ஸ்திரீகளுக்கு சஞ்சீவி.

பதிவு எண் :



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குரு மருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்

(2) குரு கஸ்தூரி காரமாத்திரை

(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விழங்குகிறது.

(4) குரு பால் பவுடர்—மாட்டுபாலே தாய்ப்பாலுக்கு சமானமாக்குகிறது

(5) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி

(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது

(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்

(8) சகலரண கழிம்பு—சகலவித புண்பொடிகளுக்கு

(9) வயிற்றுக் கடுப்பு மருந்து

(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.

(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு

(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |